REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 பெப்ரவரி 10 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 92 இல. 36 | Saturday 10, February, 2024 | 09பக்கங்கள் | 50/-

# கொழும்பு நகரில் இன்று 15 மணிநேர நீர் வெட்டு



கொழும்பின் சில பகுதிகளில் இன்று (10) 15 மணிநேர நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. கொழும்பு 11, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளிலேயே நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், நாளை மாலை 06

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில்

# ஜனாதிபதி ரணில் அவுஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சருடன் சந்திப்பு

## பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட துறைகள் குறித்தும் பேச்சு





அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் 07ஆவது இந்து சமுத்திர மாநாட்டுடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனீ வோங்கிற்கும் (Penny Wong) இடையிலான சந்திப்பு நேற்று (09) முற்பகல் நடைபெற்றது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் சார்பில் இலங்கை ஜனாதிபதியை மரியாதையுடன் வரவேற்ற அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர், இந்த மாநாட்டுக்கு இலங்கை வழங்கிய சிறப்பான ஆதரவையும் பாராட்டினார்.

இந்து சமுத்திரம் தொடர்பில் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மற்றும் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் தற்போதுள்ள ஒத்துழைப்பு குறித்தும் அமைச்சர் விளக்கினார்.

இந்து சமுத்திர வலய நாடுகள் சங்கத்தின் (Indian Ocean Rim Association) செயற்பாடுகள் மற்றும் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்து சமுத்திரத்தை நோக்கி 06



அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் 07ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனீ வோங்க், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் மற்றும் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஸ்ணன் ஆகியோரை சந்தித்த போது...

## பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் திட்டம்

# ஆஸி. வாழ் இலங்கையருக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு

## பேர்த் நகரில் வசிக்கும் இலங்கையருடனான சந்திப்பில் தெரிவிப்பு

நாட்டை மீளக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துடன் தொடர்ச்சியாக இணைந்து கொள்ளுமாறு அவுஸ்திரேலிய வாழ் இலங்கையருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் வசிக்கும் அவுஸ்திரேலியா வாழ் இலங்கையரை நேற்று (09) சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவது மற்றும் நவீனமயப்படுத்துவது குறித்து புலம்பெயர் இலங்கையருக்கு அறிவுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த வேலைத்திட்டத்தில் தொடர்ச்சியாக இணைந்துகொள்ளுமாறும் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். இலங்கையைக் கட்டியெழுப்ப அரசாங்கம் ஆரம்பித்திருக்கும் வேலைத் திட்டத்தைப் பாராட்டிய புலம்பெயர் இலங்கையர், காலநிலை, சுற்றுலா உள்ளிட்ட துறைகளின் அபிவிருத்திக்காக அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதாகவும் தெரிவித்தனர்.

இதன்போது புலம்பெயர் இலங்கையரின் கேள்விகளுக்கு பதிலளித்த ஜனாதிபதி, நாட்டின் முன்னேற்றத்துக்காக நீண்டகால கொள்கைத் திட்டங்களை செயற்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் தெரிவித்தார். 06

**அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தில் தொடர்ச்சியாக இணையுமாறும் வேண்டுகோள்**

தமிழ் அரசியல்வாதிகள் சுயலாப நோக்கின்றி

# மக்களுக்காக பொதுநலம் கருதி செயற்பட முன்வர வேண்டும்

## சபையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ் அரசியல்வாதிகள் சுயலாப நோக்கில் செயற்படாமல் எமது மக்களுக்காக பொது இலாபம் என்ற ரீதியில் செயற்படுவதற்கு முன்வர வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். 06

# 'அஸ்வெசும' இரண்டாம் கட்டம்; இன்று முதல் விண்ணப்பிக்கலாம்



'அஸ்வெசும' இரண்டாம் கட்டத்துக்காக நான்கு இலட்சம் புதிய பயனாளிகளை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரும் பணி இன்று (10) முதல் ஆரம்பிக்கப்படுமென்பதுடன், கடந்த முறை இந்த திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியாமல் போனவர்கள் மீண்டும் இம்முறை விண்ணப்பிக்க முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பாக இதன்போது கவனத்தில் கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 06

## சபாநாயகருடன் அமெரிக்க தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று முன்தினம் (08) பாராளுமன்றத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர். 06

மார்ச் 14 முதல் 16 வரை

# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

## விபரங்கள் இணையத்தளத்தில்




யாழ். பல்கலைக்கழகத்தின் 38ஆவது பட்டமளிப்பு விழா, எதிர்வரும் மார்ச் மாதம் 14ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை 03 தினங்களுக்கு நடைபெறவுள்ளதாக, பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. இந்தப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றுக்கொள்ள 06

# வர்த்தக வங்கிகளுக்கான குறுகியகால கடன் வழங்கல்

## கட்டுப்பாடுகள் தளர்வு




வர்த்தக வங்கிகளுக்கு குறுகிய கால கடன் வழங்க நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதாக, இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. நாணயக் கொள்கை சபை நேற்று முன்தினம் கூடிய போதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதற்கமைய இம்மாதம் 16ஆம் திகதி முதல் 06

அரச நிதிக்குழுவின்

# தலைவராக மீண்டும் ஹர்ஷ டி சில்வா

## சபையில் சபாநாயகர் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் பதவிக்குப் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா மீண்டும் 06

# ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவுகள் ஆரம்பம்



ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவுகள் ஆரம்பித்துள்ளமை அவர்களது செயற்பாடுகளிலிருந்து தெரிய வருவதாக, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே, அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"எமது போராட்டத்துக்கு அடித்தார்கள், கண்ணீர் புகைக் குண்டுகளால் தாக்கியதாகத் தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தியினர் நேற்று 06

# அரசியல் கைதிகள் பலர் விடுதலை; ஏனையவர்களையும் விடுவிக்கவும்

## ஜனாதிபதிக்கு சார்ள்ஸ் MP நன்றி தெரிவிப்பு




யுத்த காலத்தில் பலர் அரசியல் கைதிகளாக கைது செய்யப்பட்டதாகவும் அவர்களில் பலரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுதலை செய்துள்ளதாகத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் 06

03 **349 பேர் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பட்டியல்**


பெலியத்த ஐவர் படுகொலை சம்பவம்

# கொஸ்கொட சுஜீயின் நெருங்கிய சகா 'சாமிக்க' ரி 56 துப்பாக்கியுடன் கைது



பெலியத்தவில் ஐந்து பேரை சுட்டுப் படுகொலை செய்தமைக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் T56 ரக துப்பாக்கியுடன், பிரபல பாதாள உலகக் குழுத் தலைவரான கொஸ்கொட சுஜீ என்பவரின் நெருங்கிய உறவினரான "சாமிக்க" என்பவர் பெலியத்தவில் கைது செய்யப்பட்டதாக கொழும்பு குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது. அந்த துப்பாக்கியுடன், ஒரு மகசீன் மற்றும் 32 06

# சாந்தன் விரைவில் நாடு திரும்புவார்; புதிய கடவுச்சீட்டு அனுப்பிவைப்பு




முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி விடுதலையாகியுள்ள சாந்தன் இலங்கை திரும்புவதற்கான ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவருக்கு புதிய கடவுச்சீட்டு தேவைப்பட்டதால் இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்துக்கமைய கடவுச்சீட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக, இலங்கை வெளிவிவகார அமைச்சகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் சாந்தன் இந்தியாவிலிருந்து இலங்கை திரும்புவதற்கான ஏற்பாடுகள் எதிர்வரும் 06

## தொழிலாளர் பற்றாக்குறைக்கு தீர்வு

# இறப்பர் பால் வெட்டும் நவீன Robo இயந்திரம்



**தொழிலாளர் பற்றாக் குறைக்கு தீர்வு காணும் நோக்கில் இலங்கையில் முதன் முறையாக ரோபோ தொழில்நுட்பத்தின் உதவியுடன் இறப்பர் பால் வெட்டும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், இலங்கையிலுள்ள தனியார் நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.** 06

உலக பீட்சா (Pizza) தினம் நேற்று

# 12 கிலோ பீட்சா தயாரித்து நீர்கொழும்பில் சாதனை



உலக பீட்சா (Pizza) தினத்தை யிட்டு நீர்கொழும்பிலுள்ள ஹோட்டலொன்றின் ஊழியர்களால் மிகப்பெரிய பீட்சா தயாரிக்கப்பட்டுள்ளதுடன், பீட்சாவுக்காக பெருமளவான பீட்சா விரும்பிகள் ஹோட்டலுக்கு வருவதாக, 06

# யாழில் 106 பேருக்கு காணி உறுதிகள் வழங்கிவைப்பு





(யாழ். விசேட நிருபர்)

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் யாழில் 106 பயனாளிகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 106 பயனாளிகளுக்கு உறுதி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது மேலதிகமாக 20 பயனாளிகளுக்கு வீடமைப்பு கடனுக்கான முதற்கட்ட காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி, உப தலைவர் லக்ஷ்மன் குணவர்தன, யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) கே.ஸ்ரீமோகனன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா எதிர்வரும் மார்ச் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரையில் நடாத்த பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற தகுதியானவர்களின் விபரங்கள் பல்கலைக்கழக இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தை பார்வையிட முடியும். இந்நிலையில் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற தகுதியானவர்களின் விபரங்கள் பல்கலைக்கழக இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தை பார்வையிட முடியும்.

# வடக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவ தயார்; ஆளுநரிடம் நெதர்லாந்து துணைத்தூதுவர் உறுதி

(யாழ்.விசேட, பருத்தித்துறை நிருபர்கள்)



வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தேவையான பங்களிப்பை செய்ய தயார் என நெதர்லாந்து துணைத்தூதுவர் தெரிவித்தார்.

நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான துணைத்தூதுவர் இவன் ருட்ஜென்ஸ் (Iwan Rutjens), வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற குறித்த சந்திப்பில், வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆளுநர் தெளிவுப்படுத்தினார்.

விடயங்களை கேட்டறிந்த நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான துணைத்தூதுவர் இவன் ருட்ஜென்ஸ் (Iwan Rutjens) குடாநாட்டிற்கான குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்க தயார் எனக் கூறினார்.

அத்துடன் முதலீட்டுத் திட்டங்களை ஊக்குவித்து வடக்கு மாகாண அபிவிருத்திக்கு தேவையான பங்களிப்பை வழங்கவும் தயார் எனவும் அவர் உறுதியளித்தார்.

# மன்னார் பொது வைத்தியசாலையில் நவீனப்படுத்தப்பட்ட மகற்பேறு வாட்டுக்கள் திறப்பு

(தலைமன்னார் விசேட நிருபர்)



ஐக்கிய இராச்சிய மன்னார் நலன்புரி நிதியத்தின் அனுசரணையுடன் 38 மில்லியன் ரூபா செலவில் உயர்தர வசதிகளுடன் மன்னார் பொது வைத்தியசாலையில் மகற்பேறு வார்ட்டுகள் நவீனமயப்படுத்தப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நவீன முறையில் புனரமைப்பு செய்யப்பட்டு அதற்கான உபகரணங்களையும் வழங்கியுள்ளனர்.

பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்திகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ். எம்.சார்ள்ஸ் கலந்து கொண்டதுடன் ஐக்கிய இராச்சிய பிரித்தானியாவில் புலம் பெயர்ந்து வாழும் மன்னார் மக்களாகிய மன்னார் நலன்புரி சங்கத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன் ஆகியோர் புதிய வார்ட்டுக்களை திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வில் புலம் பெயர்ந்து வாழும் மன்னார் நலன்புரி சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் வட மாகாணம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது மகற்பேறு வாட்டில் தங்கியிருந்தவர்களுக்கான பொதிகளும் ஆளுநரினாலும் அதிதிகளினாலும் வழங்கப்பட்டன.

## கற்கைக் கௌரவிப்பு விழா

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரி பெரியமாவடி சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணிக்கு கற்கைக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் மு.கதிரவேலு தலைமையில் இடம்பெறவுள்ள கௌரவிப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராக யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி முதல்வர் ந.சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் சு.பிரகலாதனும், கௌரவ விருந்தினராக கோவிற்குடியிருப்பு கிராம அலுவலர் ச.ஞானசேந்தனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# வடக்கின் உதயம்

## வவுனியாவில் வயல்விழாவும் வர்த்தக ரீதியிலான வீட்டுத்தோட்ட செய்கையும்



(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா, பகுதியில் வயல் விழாவும் வர்த்தகரீதியிலான வீட்டுத்தோட்ட செய்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வும் நேற்று நடைபெற்றது.

இதன்போது பரசூட் முறையில் நெற்செய்கை செய்யும் முறை மற்றும் அம்முறையை எவ்வாறு மேற்கொள்வது தொடர்பாக செய்முறை விளக்கங்களை விவசாய போதனாசிரியர்களால் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

மேலும், இம்முறை மூலமாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயலினை விருந்தினர்கள் மற்றும் விவசாயிகள் பார்வையிட்டிருந்ததுடன், வர்த்தக நோக்கில் பயிரிடப்பட்ட வீட்டுத்தோட்ட செய்கையினையும் பார்வையிட்டிருந்தனர்.

வவுனியா பிரதி விவசாய பணிப்பாளர் பி. அற்புதசந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகு, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் மற்றும் விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## புதுக்குடியிருப்பில் சட்டவிரோத துப்பாக்கி, கஞ்சாவுடன் ஒருவர் கைது!

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு விசுவமடு பகுதியில் சட்டவிரோத நாட்டுத்துப்பாக்கி மற்றும் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 37 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன் மாலை இடம்பெற்றுள்ளது. புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விசுவமடு பகுதியில் வாகன திருத்தகம் வைத்திருக்கும் நபரொருவர் சட்டவிரோத நாட்டுத்துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டிலும் அவரிடமிருந்து 10 மில்லிக்கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டிலும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தும் நடவடிக்கையில் புதுக்குடியி

## யாழ்.போதனாவில் விபத்துகளில் சிக்கி அனுமதிக்கப்பட்டவர்களில் 76 பேர் உயிரிழப்பு

(யாழ்.விசேட நிருபர்)




யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 2023ஆம் ஆண்டு, விபத்துக்குள்ளாகி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் 76 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் விபத்துக்களில் சிக்கிய நிலையில் ஆயிரத்து 559 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 76 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## மாவனல்லை தீ விபத்து;
# சப்ரகமுவ மாகாண ஆளுநர் நேரில் சென்று நிலைமைகளை ஆராய்வு

(காவத்தை தினகரன் விசேட நிருபர்)

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மாவனல்லை பிரதான பஸ் தரிப்பு நிலையத்தின் தற்போதைய நிலைமைகளை சப்ரகமுவ ஆளுநர் நவீன் திசாநாயக்க நேரில் சென்று பார்வையிட்டார். கடந்த 28ஆம் திகதி இரவு தீயினால் எரிந்து நாசமான மாவனல்லை பிரதான பஸ் தரிப்பு நிலையத்தை சுற்றி உள்ள சுமார் 30 கடைத்தொகுதிகளின் நிலைமைகளை சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க நேரில் சென்று பார்வையிட்டார். தீ பரவியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. தீ பரவலை மாவனல்லை பிரதேச சபைக்கு சொந்தமான தீயணைப்பு பிரிவினர் மற்றும் அதிகாரிகள் பொலிஸார் உட்பட பிரதேச மக்களும் இணைந்து சில மணித்தியாலங்களில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தீயினால் எரிந்து நாசமாகி அனைத்து கடைத்தொகுதிகளும் பலகைகள் போன்ற சாதாரண பொருட்களை பயன்படுத்தி கட்டப்பட்டவையால் தீ வேகமாக பரவி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

தீயினால் எரிந்து நாசமாக அனைத்து கடைத்தொகுதிகள் மற்றும் பஸ் தரிப்பு நிலையத்தையும் அமைத்து கொடுப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.




மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் மாசிமக மகோற்சவ எட்டாம் நாள் பகல் வசந்த மண்டப பூஜைகளின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

# மலைச்சாரல்

## மின்சாரம் தாக்கி ஆணொருவர் உயிரிழப்பு

(கம்பளை நிருபர்)



கம்பளை புப்புரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புப்புரஸ்ஸ லெவலன் ஜீகே தோட்டத்தில் மின்சாரம் தாக்கி ஆணொருவர் உயிரிழந்துள்ளார். புப்புரஸ்ஸ ஜீகே பிரதேசத்தில் வசித்து வந்த 38 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையான அழகன் கணேசன் என்பவரே இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

வறுமைக் கோட்டில் வாழும் இக்குடும்பம் மின்சார கட்டணத்தை உரிய முறையில் கட்டாமையால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது. இதனால் இவர் அருகிலுள்ள வீடுகளிலிருந்து மின்சாரத்தைப் பெற்று பயன்படுத்தி வந்தார். நேற்று காலை மின்சார இணைப்புக்கம்பியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மின்சாரம் தாக்கி வீட்டுக்குள்ளேயே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் புப்புரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பதுளை மாவட்ட ஆடற்கலைப் போட்டியில் வெற்றி பெற்றோர்



அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம், இந்து சமய, கலாசார திணைக்களம் மற்றும் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் அனுசரணையுடன் அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தி வரும் ஆடற்கலைப் போட்டியின் பதுளை மாவட்டப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில், கந்தேகெதர ஸ்ரீ வாணி அறநெறி பாடசாலையும்,செரண்டிப் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் அறநெறிப் பாடசாலையும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. கந்தேகெதர ஸ்ரீ வாணி அறநெறி பாடசாலை சார்பில் N.கவிசாலினி, G. லினுஷா, V.திபஹரனி, P.சுமித்ரா, S.சதுர்ஷினி, T. நதிஷா, J.கௌசல்யா, U. புவிக்ஸா, R. அபிலாஷினி , S.மல்லிகா ஆகியோர் பங்கு பற்றினார்கள்.

செரண்டிப், ஸ்ரீ சிவசுப்பிரமணியர் அறநெறிப் பாடசாலை சார்பில் M. நிலுக் ஷி, M. மிதுஷிக்கா, J. மிதுர்ஷன், K. சஸ்வின்காந்த், C. கபிஷ்னா, K. மிதுஷான், S. சப்ரித்தா, J.கீர்த்திகா, R. கிஷானி, S. திலக்ஷனா ஆகியோர் பங்கு பற்றினார்கள். இதற்கான ஏற்பாடுகளை ஆசிரியர் யசோ பிரசாத் செய்திருந்தார்.

இவ்விரு அறநெறிப் பாடசாலைகளும் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் எதிர்வரும் 2024.03.02ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் நடத்தவுள்ள இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 பெப்ரவரி 10 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
ளுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**
சோபகிருது வருடம் தை 27
ராகுகாலம் : பகல் : 9.34 - 11.04வரை
சுபநேரம் : காலை : 3.34 - 5.04வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

நாட்டின் பொருளாதார மீட்சி தொடர்பில்

# அரசு எடுக்கும் தீர்மானங்களுக்கு பாராளுமன்றம் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்

## பிரதமர் தினேஷ் குணவர்தன சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டு மக்கள் வழங்கியுள்ள மக்களாணையை மக்களுக்காகவே பயன்படுத்த வேண்டும் என்றும் அந்த வகையில் பொருளாதார மீட்சி தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களுக்கு பாராளுமன்றம் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தினால் நாடு தற்போது இயல்பு நிலைக்கு திரும்பி பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளதாக தெரிவித்த அவர், பொருளாதார மீட்சிக்கு ஜனாதிபதி எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறும் சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,



கடந்த இரண்டாண்டு காலமாக நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளையும், அரசியல் ரீதியிலான நெருக்கடிகளையும் எதிர்கொண்டது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதிக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம். 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தை காட்டிலும் நாடு தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

கடந்த ஆண்டு இரட்டை இலக்கத்தில் காணப்பட்ட உணவு மற்றும் உணவு அல்லாத பணவீக்கம் தற்போது ஒற்றை இலக்கத்துக்கு நிலைப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதார மீட்சிக்கு ஜனாதிபதி எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவோம். சுற்றுலாத்துறை கைத்தொழில், விவசாயத்துறை உள்ளிட்ட துறைகள் முன்னேற்றமடைந்துள்ளன.

விவசாயத்துறையை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த வருடத்தில் விளைச்சலை இரட்டிப்பாக பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. தேசிய விவசாயத்துறையை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் பிரதான இலக்காகும்.

ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு வெளிப்படைத்தன்மையுடனான செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அஸ்வெசும நலன்புரித் திட்டம் வினைத்திறனான முறையில் செயற்படுத்தப்படுகிறது. நெருக்கடியான சூழ்நிலையிலும் குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு நிவாரணம் வழங்கியுள்ளோம்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் தீர்மானங்களுக்கும், செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு

06

'வற்' அறிமுகப்படுத்தப்பட்ட பின்

# அரசாங்கத்தின் வருமானம் எதிர்பார்ப்பை விட அதிகம்



அரசாங்கத்தால் அறிமுகம் செய்யப்பட்ட பெறுமதி சேர் வரி அதிகரிப்பு காரணமாக ஜனவரி மாதத்தில் அரசாங்கத்தின் வருமானம் 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

219 பில்லியன் ரூபா வருமானம் எதிர்பார்க்கப்பட்ட போதும், 274 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார். இதேவேளை சுங்கத் திணைக்களத்தின் வருமானம் 11 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் மதுவரித் திணைக்களத்தின் வருமானமும் கூட எதிர்பார்த்ததை விட அதிகரித்துள்ளதாகவும், அவர் கூறினார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமானம் 114 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளதாகத் தெரிவித்த அவர், எனவே அரசாங்க வருமான அதிகரிப்பானது நாட்டுப் பிரஜைகளின் நலனை மேம்படுத்துமெனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

ஆடைத் தொழிற்சாலை மூடியதால்

# ஜோர்தானில் நிர்க்கதியான 66 பேர் நாடு திரும்பினர்

ஜோர்தானில் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் சிரமத்துக்குள்ளான 66 இலங்கையர் நேற்று அதிகாலை நாடு திரும்பினர்.

ஜோர்தானில் இந்த இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளிலும் பணிபுரிந்த இலங்கையைச் சேர்ந்த மற்றுமொரு குழுவினர் எதிர்வரும் இரண்டு நாட்களில் இலங்கை திரும்பவுள்ளதாக, ஜோர்தானிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்தது.

06

# சேவையிலிருந்து அகற்றப்பட்ட 200 பஸ்கள் புனரமைத்து போக்குவரத்துக்கு இணைப்பு







இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகள் கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், சேவையிலிருந்து நீக்கப்பட்ட 200 பஸ்கள் புனரமைக்கப்பட்டு சேவைக்கு கொண்டு வரப்பட்டன.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் ஆலோசனைக்கமைய, புனரமைக்கப்பட்ட இப்பஸ் வண்டிகள் சேவைக்கு விடும் நிகழ்வு, பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் இ.போ.ச டிப்போக்களில் 852 பஸ்கள் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டன. மேலும் நாடளாவிய ரீதியில் 11 பிராந்திய வேலைத் தளங்கள் மற்றும் 107 இ.போ.ச டிப்போக்களின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் இந்தப் பஸ்களை மறுசீரமைக்கத் தொடங்கினர்.

2023ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த பஸ் புனரமைப்பு வேலைத்திட்டத்தின் முதற்கட்டத்தின் கீழ் சேவையிலிருந்து நீக்கப்பட்ட 193 பஸ்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் 193 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதன் இரண்டாம் கட்டத்தின் கீழ் 201 பஸ்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. அதற்காக செலவிடப்பட்ட தொகை 270 மில்லியன் ரூபா. தற்போதைய விலையில் 200 புதிய பஸ்களை கொள்முதல் செய்தால், சுமார் 4,200 மில்லியன் ரூபா செலவு செய்ய வேண்டிய நிலை உருவாகும். புனரமைக்கப்பட்ட பஸ்களை நாளாந்தம் இயக்குவதன் மூலம் இலங்கை போக்குவரத்து சபைக்கு நாளாந்தம் சுமார் 10 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும்.

நிகர இலாபம் 04 மில்லியன் ரூபாய். அதன்படி, இந்த இருநூறு புனரமைக்கப்பட்ட பஸ்களை இயக்குவதன் மூலம் அதிகபட்சமாக 1,200 மில்லியன் ரூபா நிகர இலாபம் ஈட்ட முடியும். ஆண்டுக்கு குறைந்தபட்ச நிகர இலாபம் 900 மில்லியன் பெறலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் நலன் கருதிய இலக்கு

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலேயே எட்டப்பட வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து



எமது தமிழ் மக்கள் நலன் கருதிய இலக்கு என்பது எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலேயே எட்டப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் (09) கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்

எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, அரசியல் தீர்வுப் பிரச்சினையாக இருந்தாலும் சரி. இந்த காலகட்டத்தை நாம் தவற விடுவோமானால், மீளவும் இத்தகையதொரு பொன்னான காலத்தை நினைத்துப் பார்க்க இயலாது என்றே கருதுகிறேன். தேர்தல்களில் நாங்கள் தனித்தனியே

06

# மார்ச் மாதத்துக்குப் பின்னர் எரிபொருள் விலை குறையும்



ஐரோப்பாவில் குளிர்காலம் முடிவடையும் போது எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு பின்னர் எரிபொருள் விலை குறைவடையுமென்று எதிர்பார்ப்பதாக, மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ.சானக தெரிவித்தார்.

ஐரோப்பாவில் குளிர்காலம் தொடங்கிய நிலையில் எரிபொருள் பயன்பாடு அதிகளவில் உள்ளதாகவும் டிசெம்பர் மாதத்திலிருந்து ஏப்ரல் மாத நடுப்பகுதிவரை உலகில் எரிபொருள் விலை உயர்வு இயல்பானதெனவும், அவர் தெரிவித்தார். ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (08) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே, இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இச்சந்திப்பில் மேலும் தெரிவித்த அவர்,

“கடினமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு நாடு படிப்படியாக மீண்டு வரும் சூழ்நிலையில் நாம் உள்ளோம். ஒரு காலத்தில் நாம் எரிபொருள் வரிசையில் நின்றோம். அனைவரின் அர்ப்பணிப்புடன் நிலையான எரிபொருள்

06



கொழும்பு, புளூமெண்டல் கலைமகள் தமிழ் வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டடத்தை நிறைவு செய்வதற்கான சாஹிதா அறக்கட்டளையால் ஒரு இலட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் முன்னாள் மேல்மாகாணசபை உறுப்பினர் நௌஸர் பௌஸி, பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஆகியோரும் கலந்து கொண்டார். (படம்: சுதத் மலவீர)

# 349 பேர் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பட்டியல் யுக்திய பதிவேட்டில் இணைப்பு

நாடளாவிய ரீதியில் 349 போதைப்பொருள் கடத்தல்காரர்களின் பட்டியல், பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்புரைக்கமைய பொலிஸாரின் ‘யுக்திய’ பதிவேட்டில் இணைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 டிசெம்பர் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ‘யுக்திய’ நடவடிக்கையின் கீழ் நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் கைது நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக, பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

இதற்கமைய தற்போது கைது செய்யப்பட்ட கடத்தல்காரர்களை உதவியாளர்களென அடையாளம் காணப்பட்ட 53 கடத்தல்காரர்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் புதிதாக அடையாளம் காணப்பட்ட 296 போதைப்பொருள் கடத்தல்காரர்கள் உட்பட 349 போதைப்பொருள் கடத்தல்காரர்களின் பட்டியலே வெளியிடப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் அனைத்துப் பிரிவுகளுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு இந்தப் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 பெப்ரவரி 10 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 05.11
லுஹர் - 12.26
அஸர் - 03.48
மஃரிப் - 06.21
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் தை 27
ராகுகாலம் : பகல் : 9.34 - 11.04வரை
சுபநேரம் : காலை : 3.34 - 5.04வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



நாட்டின் பொருளாதார மீட்சி தொடர்பில்

# அரசு எடுக்கும் தீர்மானங்களுக்கு பாராளுமன்றம் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்

## பிரதமர் தினேஷ் குணவர்தன சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டு மக்கள் வழங்கியுள்ள மக்களாணையை மக்களுக்காகவே பயன்படுத்த வேண்டும் என்றும் அந்த வகையில் பொருளாதார மீட்சி தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களுக்கு பாராளுமன்றம் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தினால் நாடு தற்போது இயல்பு நிலைக்கு திரும்பி பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளதாக தெரிவித்த அவர், பொருளாதார மீட்சிக்கு ஜனாதிபதி எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறும் சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,



கடந்த இரண்டாண்டு காலமாக நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளையும், அரசியல் ரீதியிலான நெருக்கடிகளையும் எதிர்கொண்டது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதிக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம். 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தை காட்டிலும் நாடு தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

கடந்த ஆண்டு இரட்டை இலக்கத்தில் காணப்பட்ட உணவு மற்றும் உணவு அல்லாத பணவீக்கம் தற்போது ஒற்றை இலக்கத்துக்கு நிலைப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதார மீட்சிக்கு ஜனாதிபதி எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவோம். சுற்றுலாத்துறை கைத்தொழில், விவசாயத்துறை உள்ளிட்ட துறைகள் முன்னேற்றமடைந்துள்ளன.

விவசாயத்துறையை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த வருடத்தில் விளைச்சலை இரட்டிப்பாக பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. தேசிய விவசாயத்துறையை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் பிரதான இலக்காகும்.

ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு வெளிப்படைத்தன்மையுடனான செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அஸ்வெசும நலன்புரித் திட்டம் வினைத்திறனான முறையில் செயற்படுத்தப்படுகிறது. நெருக்கடியான சூழ்நிலையிலும் குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு நிவாரணம் வழங்கியுள்ளோம்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் தீர்மானங்களுக்கும், செயற்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு

06

'வற்' அறிமுகப்படுத்தப்பட்ட பின்

# அரசாங்கத்தின் வருமானம் எதிர்பார்ப்பை விட அதிகம்



அரசாங்கத்தால் அறிமுகம் செய்யப்பட்ட பெறுமதி சேர் வரி அதிகரிப்பு காரணமாக ஜனவரி மாதத்தில் அரசாங்கத்தின் வருமானம் 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

219 பில்லியன் ரூபா வருமானம் எதிர்பார்க்கப்பட்டபோதும், 274 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார். இதேவேளை சுங்கத் திணைக்களத்தின் வருமானம் 11 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் மதுவரித் திணைக்களத்தின் வருமானமும் கூட எதிர்பார்த்ததை விட அதிகரித்துள்ளதாகவும், அவர் கூறினார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமானம் 114 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளதாகத் தெரிவித்த அவர், எனவே அரசாங்க வருமான அதிகரிப்பானது நாட்டுப் பிரஜைகளின் நலனை மேம்படுத்துமெனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

ஆடைத் தொழிற்சாலை மூடியதால்

# ஜோர்தானில் நிர்க்கதியான 66 பேர் நாடு திரும்பினர்

ஜோர்தானில் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் சிரமத்துக்குள்ளான 66 இலங்கையர் நேற்று அதிகாலை நாடு திரும்பினர்.

ஜோர்தானில் இந்த இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளிலும் பணிபுரிந்த இலங்கையைச் சேர்ந்த மற்றுமொரு குழுவினர் எதிர்வரும் இரண்டு நாட்களில் இலங்கை திரும்பவுள்ளதாக, ஜோர்தானிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்தது.

06

# சேவையிலிருந்து அகற்றப்பட்ட 200 பஸ்கள் புனரமைத்து போக்குவரத்துக்கு இணைப்பு








இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகள் கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், சேவையிலிருந்து நீக்கப்பட்ட 200 பஸ்கள் புனரமைக்கப்பட்டு சேவைக்கு கொண்டு வரப்பட்டன.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் ஆலோசனைக்கமைய, புனரமைக்கப்பட்ட இப்பஸ் வண்டிகள் சேவைக்கு விடும் நிகழ்வு, பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் இ.போ.ச டிப்போக்களில் 852 பஸ்கள் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டன. மேலும் நாடளாவிய ரீதியில் 11 பிராந்திய வேலைத் தளங்கள் மற்றும் 107 இ.போ.ச டிப்போக்களின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் இந்தப் பஸ்களை மறுசீரமைக்கத் தொடங்கினர்.

2023ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த பஸ் புனரமைப்பு வேலைத்திட்டத்தின் முதற்கட்டத்தின் கீழ் சேவையிலிருந்து நீக்கப்பட்ட 193 பஸ்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் 193 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதன் இரண்டாம் கட்டத்தின் கீழ் 201 பஸ்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. அதற்காக செலவிடப்பட்ட தொகை 270 மில்லியன் ரூபா. தற்போதைய விலையில் 200 புதிய பஸ்களை கொள்முதல் செய்தால், சுமார் 4,200 மில்லியன் ரூபா செலவு செய்ய வேண்டிய நிலை உருவாகும். புனரமைக்கப்பட்ட பஸ்களை நாளாந்தம் இயக்குவதன் மூலம் இலங்கை போக்குவரத்து சபைக்கு நாளாந்தம் சுமார் 10 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும்.

நிகர இலாபம் 04 மில்லியன் ரூபாய். அதன்படி, இந்த இருநூறு புனரமைக்கப்பட்ட பஸ்களை இயக்குவதன் மூலம் அதிகபட்சமாக 1,200 மில்லியன் ரூபா நிகர இலாபம் ஈட்ட முடியும். ஆண்டுக்கு குறைந்தபட்ச நிகர இலாபம் 900 மில்லியன் பெறலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் நலன் கருதிய இலக்கு

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலேயே எட்டப்பட வேண்டும்



## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து

எமது தமிழ் மக்கள் நலன் கருதிய இலக்கு என்பது எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலேயே எட்டப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் (09) கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்

எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, அரசியல் தீர்வுப் பிரச்சினையாக இருந்தாலும் சரி. இந்த காலகட்டத்ததை நாம் தவற விடுவோமானால், மீளவும் இத்தகையதொரு பொன்னான காலத்தை நினைத்துப் பார்க்க இயலாது என்றே கருதுகிறேன். தேர்தல்களில் நாங்கள் தனித்தனியே

06

# மார்ச் மாதத்துக்குப் பின்னர் எரிபொருள் விலை குறையும்



ஐரோப்பாவில் குளிர்காலம் முடிவடையும் போது எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு பின்னர் எரிபொருள் விலை குறைவடையுமென்று எதிர்பார்ப்பதாக, மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ.சானக தெரிவித்தார்.

ஐரோப்பாவில் குளிர்காலம் தொடங்கிய நிலையில் எரிபொருள் பயன்பாடு அதிகளவில் உள்ளதாகவும் டிசெம்பர் மாதத்திலிருந்து ஏப்ரல் மாத நடுப்பகுதிவரை உலகில் எரிபொருள் விலை உயர்வு இயல்பானதெனவும், அவர் தெரிவித்தார். ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (08) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே, இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.இச்சந்திப்பில் மேலும் தெரிவித்த அவர்,

“கடினமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு நாடு படிப்படியாக மீண்டு வரும் சூழ்நிலையில் நாம் உள்ளோம். ஒரு காலத்தில் நாம் எரிபொருள் வரிசையில் நின்றோம். அனைவரின் அர்ப்பணிப்புடன் நிலையான எரிபொருள்

06



கொழும்பு, புளூ மெண்டல் கலைமகள் தமிழ் வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டடத்தை நிறைவு செய்வதற்கான சாஹிதா அறக்கட்டளையால் ஒரு இலட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் முன்னாள் மேல்மாகாணசபை உறுப்பினர் நௌஸர் பௌஸி, பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஆகியோரும் கலந்து கொண்டார். (படம்: சுதத் மலவீர)

# 349 பேர் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பட்டியல் யுக்திய பதிவேட்டில் இணைப்பு

நாடளாவிய ரீதியில் 349 போதைப்பொருள் கடத்தல்காரர்களின் பட்டியல், பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்புரைக்கமைய பொலிஸாரின் ‘யுக்திய’ பதிவேட்டில் இணைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 டிசெம்பர் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ‘யுக்திய’ நடவடிக்கையின் கீழ் நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் கைது நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக, பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

இதற்கமைய தற்போது கைது செய்யப்பட்ட கடத்தல்காரர்களை உதவியாளர்களென அடையாளம் காணப்பட்ட 53 கடத்தல்காரர்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் புதிதாக அடையாளம் காணப்பட்ட 296 போதைப்பொருள் கடத்தல்காரர்கள் உட்பட 349 போதைப்பொருள் கடத்தல்காரர்களின் பட்டியலே வெளியிடப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் அனைத்துப் பிரிவுகளுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு இந்தப் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 27ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 29

## குறள் தரும் சிந்தனை



உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்

அகத்தில் அன்பையும் இரக்கத்தையும் சுரக்கச் செய்யாத கண்கள் முகத்தில் உள்ளவைபோல் தோன்றுவதைத் தவிர, வேறு எந்தப்பயனும் இல்லாதவைகளாகும்.

# புலம்பெயர் இலங்கையருக்கு ஜனாதிபதி விடுத்துள்ள அழைப்பின் முக்கியத்துவம்

இலங்கையை வலுவான பொருளாதார நாடாகக் கட்டியெழுப்புவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளன. இதன் நிமித்தம் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பட்டு வருகின்றன.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. என்றாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமைப் பதவியை ஏற்றதைத் தொடர்ந்து முன்னெடுத்துவரும் மேம்பாட்டுத் திட்டங்களின் பயனாக பொருளாதாரம் கட்டம் கட்டமாக மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருக்கிறது.

ஆன போதிலும் நாட்டின் பொருளாதாரத்தை பலமானதாகவும் நிலைபேறானதாகவும் கட்டியெழுப்புவதன் அவசியமும் அதன் முக்கியத்துவமும் பரவலாக உணரப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் அதுவாகவே உள்ளது.

அவ்வாறான பொருளாதாரத்தைக் கொண்டிருக்கும் போது 2022 ஆம் ஆண்டில் போன்று மீண்டுமொரு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடாது. நாடொன்று பொருளாதார ரீதியில் பலமாக இருக்கும் போது தான் மக்களும் வளமான வாழ்வைப் பெற்றுக் கொள்ளக்கூடியவர்களாக இருப்பர்.

அந்த வகையில் மக்களுக்கு சுபீட்சமான பொருளாதார வாழ்வு கிடைக்கப் பெறக்கூடிய வகையில் அனைத்து வேலைத்திட்டங்களும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் பயனாகவே 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான போது நாடும் மக்களும் முகம் கொடுத்த அசௌகரியங்களும் பாதிப்புக்களும் குருகிய காலப்பகுதிக்குள் நீங்கக்கூடியதாக இருந்தது.

என்றாலும் அப்பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் இன்னும் காணப்படவே செய்கின்றன. அதனால் இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து முழுமையாக மீட்சி பெற வேண்டிய தேவையும் உணரப்பட்டிருக்கிறது. அதற்கு அமைய பொருளாதார மேம்பாட்டு திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆன போதிலும் இந்நாட்டை பலமான பொருளாதார நாடாகக் கட்டியெழுப்புவதற்கு பல தரப்பினரதும் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும். அந்த வகையில் புலம்பெயர் இலங்கையரின் ஒத்துழைப்பும் குறிப்பிடத்தக்கதாக விளங்குகிறது.

இவ்வாறான சூழலில், இந்தியா மன்றம் மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் 07ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவுஸ்திரேலியாவில் வாழும் புலம்பெயர் இலங்கையருடனும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவது மற்றும் நவீனமயப்படுத்துவது குறித்த திட்டங்களை புலம்பெயர் இலங்கையருக்கு எடுத்துக்கூறிய ஜனாதிபதி, அவற்றுடன் தொடர்ச்சியாக இணைந்து கொள்ளுமாறும் அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பானது வெளிநாடுகளில் வதியும் புலம்பெயர் இலங்கையர் இந்நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பதற்கு சிறந்த வாய்ப்பாகும். அதனை உரிய முறையில் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு புலம்பெயர் இலங்கையர் முன்பாக உள்ளது.

இந்நாடு சுதந்திரமடைந்து கடந்த 4 ஆம் திகதியுடன் 76 வருடங்களாகி உள்ளது. அப்படியிருந்தும் இன்னும் மூன்றாம் மண்டல மற்றும் வளர்முக நாடாகவே இந்நாடு இருக்கின்றது. கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகவும் பொருளாதார ரீதியில் பலமான நிலையை நாடு அடையாதிருப்பதும் ஒரு காரணம் தான்.

அதனால் பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். அது மிகவும் இன்றியமையாத தேவையாக விளங்குகிறது. அதன் காரணத்தினால் இந்நாட்டைச் சேர்ந்த புலம் பெயர்வாளர்கள் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு நல்க வேண்டும். பெரும்பாலான புலம்பெயர்வாளர்கள் அதற்கான வசதிகளைத் தம்மகத்தே கொண்டவர்களாக உள்ளனர்.

இன்றைய காலகட்டத்தில் உலகின் பல நாடுகளது பொருளாதார முன்னேற்றங்களுக்கு பாரிய பங்களிப்பு நல்குபவர்களாக புலம்பெயர்வாளர்களும் உள்ளனர். அவர்களது பங்களிப்புக்கள் எவ்விதத்திலும் குறைந்த மதிப்பிட கூடியவையாக இல்லை.

குறிப்பாக இந்தியாவின் முன்னேற்றத்திற்கும் புலம்பெயர்வாளர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்குபவர்களாக உள்ளனர் என்று அந்நாட்டு பொருளாதார நிபுணர்களே குறிப்பிட்டுள்ளனர். இந்தியா 150 மில்லியன் புலம் பெயர்வாளர்களைக் கொண்ட நாடான போதிலும் இலங்கையும்

குறிப்பிடத்தக்க அளவிலானோரைப் புலம்பெயர்வாளர்களாகக் கொண்டுள்ளது. அவர்களும் இந்நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க முடியும். அவர்கள் தாயகத்தில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும். அவற்றின் ஊடாக நிலைபேறான பொருளாதார அபிவிருத்திப் பாதையில் நாடு விரைவாகவே பிரவேசிக்கும். அதன் மூலம் நாடும் மக்களும் தான் பயனடைவர்.

ஆகவே ஜனாதிபதியின் அழைப்புக்கு ஏற்ப அவுஸ்திரேலியா உள்ளிட்ட மேற்கு நாடுகளில் உள்ள இலங்கைப் புலம் பெயர்வாளர்கள் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துடன் இணைந்து கொள்ள வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கை தமிழர்களுக்கு விரைவில் குடியுரிமை பெற்றுத் தருவோம்

## ஊடகவியலாளர்கள் மத்தியில் தமிழக அமைச்சர் செஞ்சி கே. எஸ். மஸ்தான்



தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகேயுள்ள தேக்காட்டூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் ரூ.3.56 கோடி செலவில் அமைக்கப்பட்ட 58 வீடுகளை உள்ளடக்கிய வீடமைப்பு திட்டத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் வெளிநாட்டு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் கலந்துகொண்டு புதிய குடியிருப்புகளை திறந்து வைத்தார். அத்தோடு சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் இவ்வீடமைப்பு திட்டத்திலுள்ள வீடுகளுக்கான சாவிகளை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் கே.எஸ். செஞ்சி மஸ்தான் செய்தியாளர்களுக்கு விஷேட பேட்டியொன்றை அளித்தார்.

அச்சமயம் அவர் குறிப்பிடும் போது, 'தமிழகத்தில் இலங்கை தமிழர்களின் 106 முகாம்கள் இருக்கின்றன. அந்த முகாம்களில் 20 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் உள்ளனர். அவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அகதிகள் என்ற வார்த்தையை நீக்கி விட்டு மறுவாழ்வு முகாம் என்ற பெயரை கொண்டு வந்தது தமிழ்நாடு அரசு தான்.

தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் தங்கியுள்ள இலங்கை தமிழர்களுக்கு ரூ. 400 கோடியில் முதல் கட்டமாக 3,551 வீடுகளும், இரண்டாம் கட்டமாக 3,953 வீடுகளும் புதிதாகக் கட்டப்படுகின்றன. கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. இது தவிர, 106 முகாம்களில் தங்கியுள்ள 20 ஆயிரம் குடும்பத்தினருக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது ரூ.184 கோடி பெறுமதியான உணவுப் பொருள்கள், கப்பல்கள் மூலம் இலங்கைத் தமிழர்களுக்காக அனுப்பிவைக்கப்பட்டன என்று கூறினார்.

அதேநேரம், கடல் தான் நம்மை பிரித்துள்ளது. தமிழர் என்ற உறவு நம்மை எப்போதும் இணைத்துதான் வைத்திருக்கிறது. இலங்கை தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசிக்கு அனுப்பியுள்ளோம். இலங்கை அரசாங்கம், தமிழ்நாடு முதல்வர் நடவடிக்கையை கூர்ந்து அவதானித்து, கடந்த மாதம் இலங்கை தூதகரத்தில் இருந்து அந்நாட்டு ஆளுநரை அனுப்பி, முதன் முதலாக இலங்கையில் இருந்து தமிழ் நாட்டிற்கு வந்த 200 பேரை தெரிவு செய்து அந்நாட்டு அரசு, குடியுரிமை மூலம் பாஸ்போர்ட் வழங்கியுள்ளது.

மேலும் தமிழ்நாட்டின் சார்பில் முதல் கட்டமாக வந்தவர்களுக்கு உரிமைகள் வழங்குவதற்கான குழு அமைக்கப்பட்டு சட்டத்துறை அமைச்சரின் ஆலோசனைப்படி தீர்வு காணப்படுகிறது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நினைத்ததை செய்து முடிப்பவர். அவர் எடுக்கின்ற எல்லா முயற்சிகளும் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற முயற்சிக்கு மக்கள் ஆதரவாக இருக்கின்றனர் என்பதையும் அமைச்சர் மஸ்தான் இங்கு சுட்டிக்காட்டினார்.

இலங்கை தமிழர்களில் உள்ள மாணவர்களுக்கு பொறியியல் கல்லூரியிலும் வேளாண்மை கல்லூரியிலும் சேர்வதற்கும் தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கும். மருத்துவ கல்லூரியில் சேர்வதற்கு தான் சட்ட சிக்கல் இருக்கின்றது. அதற்கும் விரைவில் தீர்வு கிடைக்கப்பெறலாம். அதன் ஊடாக ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் விடிவுகாலம் வரும்போது நம்மோடு இருக்கின்ற இலங்கை தமிழர்களுக்கும் விடிவுகாலம் வரும்.

## தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை தமிழ் மாணவர்கள் உயர்கல்வி பயில தமிழக அரசு அனுமதி



தமிழகத்தில் தங்கி உள்ள இலங்கை தமிழ் மாணவர்களுக்கு உயர்கல்வி பயில தமிழக அரசு அனுமதி அளிக்கிறது. ஆனால், மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு மட்டும்தான் சட்டச் சிக்கல் உள்ளது. நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறும்போது, இலங்கைத் தமிழர்கள் உள்பட ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் விடிவு ஏற்படும் என்பதையும் அவர் இச்சமயம் சுட்டிக்காட்டினார்.

**எம்.கே.ஷாகுல் ஹமீது...**
திருச்சி

## மலையக மக்கள் முன்னணி:

# தேசிய மாநாடு, 35 ஆண்டு நிறைவு விழா ஏப்ரல் மாதம் 26ஆம் 27ஆம் திகதிகளில்

மலையக மக்கள் முன்னணியின் தேசிய மாநாடும் 35 ஆண்டு நிறைவு விழாவும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26ஆம் 27 ஆம் திகதிகளில் நுவரெலியாவில் அல்லது ஹட்டனில் நடாத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனை அக்கட்சியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்திருத்திருக்கிறார்.

இம்மாநாடு மற்றும் 35 வது ஆண்டு நிறைவு விழா குறித்து கட்சியின் கலந்துரையாடல் கூட்டமொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது. அக்கூட்டத்தின் போத இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகரும் மறைந்த அமைச்சருமான அமரர் பெரியசாமி சந்திரசேகரன் 1989 ஆம் ஆண்டில் இக்கட்சியை ஸ்தாபித்தார்.



யுத்தம் இந்நாட்டை ஆட்கொண்டிருந்த கால கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சியை ஆரம்பத்திலேயே ஒரம் கட்டிவிட வேண்டும் என பலரும் முயற்சி செய்த போதிலும் அமரர் சந்திரசேகரனின் அயராத முயற்சியின் பயனாகவும் அன்று அவருடன் இணைந்திருந்த இளைஞர்களின் துடிப்பான செயற்பாடுகளாலும் மலையகத்தின் ஒரு மாற்று கட்சியாக உருவெடுத்தது இம்முன்னணி.

சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றில் 1994 ஆம் ஆண்டில் ஒரு அரசாங்கத்தை தீர்மானிக்கின்ற சக்தியாக இக்கட்சி விளங்கியது. அந்தளவுக்கு இக்கட்சி அன்று வளர்ச்சி பெற்றிருந்தது.

இவ்வாறு வரலாற்று பெருமைக்குரிய கட்சியின் தலைமை பொறுப்பை அமரர் சந்திரசேகரனின் வழியில் ஏற்ற பின்பு எமது மக்களுக்கு பல வெற்றிகளை பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது என்றுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன்

மலையக மக்கள் முன்னணிக்கென ஒரு சரித்திரம் இருக்கின்றது. ஆன போதிலும் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்று உள்ளிட்ட நெருக்கடிகளால் கடந்த பல வருடங்களாக இக்கட்சியின் தேசிய மாநாட்டை நடத்த முடியாத நிலை காணப்பட்டது. என்றாலும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இம்மாநட்டையும் 35 வருட நிறைவு விழாவையும் மிகவும் சிறப்பாக நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இராதாகிருஸ்ணன் எம்.பி குறிப்பிட்டுள்ளார்.



இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் உட்பட உலகின் பல நாடுகளில் இருந்தும் முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவிருக்கும் இம்மாநாட்டில் தமிழ் நாட்டில் இருந்து மேடைப் பேச்சாளர்கள் பலரும் பங்குபற்ற உள்ளனர்.

இவ்விழாவின் போது மலையக மக்கள் முன்னணிக்காகவும் அதன் முன்னேற்றத்திற்காகவும் செயற்பட்டவர்களும் மலையகத்திற்கு பெருமை சேர்த்தவர்களும் எனப் பலரும் கௌரவிக்கப்பட உள்ளனர்.

ஏப்ரல் மாதம் நடாத்தப்படவிருக்கும் இம்மாநாடானது மலையக மக்கள் முன்னணியின் வரலாற்றில் ஒரு மைகல்கல்லாக அமையும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்திருக்கிறார்.

**நுவரெலியா தினகரன் நிருபர்**

# ஞானியார் திலகம் ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா (ரஹ்)

தரீக்கத்துல் ஹக்கிய்யதுல் காதிரிய்யாவின் ஆன்மீகத் தலைவராகத் திகழ்ந்து அண்மையில் காலமான மறைந்த ஷெய்குல் காமில், ஆரிஃப்பில்லாஹ், ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (கத்தஸல்லாஹூ ஸிர்ரஹுல் அழீம்) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குல வழியில் 34ஆம் தலைமுறை வாரிசாகவும் மெய்நிலை கண்ட ஞானி முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களின் 21ஆம் தலைமுறைப் பேரராகவும் 1937 டிசம்பர் 20ஆம் திகதி வெலிகமவில் பிறந்தார்.

உலகின் பல நாடுகளிலும் வாழும் தனது முரீதீன்களாலும் முஹிப்பீன்களாலும் வாப்பா நாயகம் என்று அன்போடு அழைக்கப்பட்ட இவர்கள் அறபு மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சம பாண்டித்தியம் பெற்றுத் திகழ்ந்தார். இவர் எழுதி வெளியிட்ட ஆக்கங்கள் இவரது ஆழ்ந்த தமிழ்ப் புலமையையும் அபார அறபு ஆற்றலையும், ஆன்மீக உச்சத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

வாப்பா நாயகத்தின் தாய்வழி மூதாதையர் 250 ஆண்டுகளுக்கு முன் பக்தாதில் இருந்து தென்னிலங்கைக்கு முதன் முதல் குடியேறிய ஒரே ஒரு ஜீலானி வமிசத்தினர் என அறியக் கூடியதாக உள்ளது. இவர்கள் காதிரிய்யாத் தரீக்கத்தின் பெரும் ஞான மகான்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது,

தனது ஆரம்பக் கல்வியை வெலிகம அறபா வித்தியாலயத்தில் ஆரம்பித்த இவர் எஸ்.எஸ்.சி வரை ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றாலும் தமிழ் மீது அவர்களுக்கு இருந்த தனிப்பட்ட ஆர்வத்தினால் அடுத்த ஆண்டே தமிழில் எஸ்.எஸ்.சி பரீட்சை எழுதி தேறினார்கள்.



காலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கற்று ஆசிரியர் தகுதிச் சான்றிதழ் பெற்ற இவர், தமிழில் பண்டிதப் பரீட்சையும் எழுதி தேர்ச்சி பெற்றார். ஆசிரியராக 1963ஆம் ஆண்டில் பொது வாழ்வை ஆரம்பித்த இவர் வெலிகம, பண்டாரக்கொஸ்வத்தை, சிலாபம், புத்தளம், அனுராதபுரம் ஆகிய ஊர்களில் 1990 வரையில் ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் (அதிபராகவும்), வட்டாரக் கல்வி அதிகாரியாகவும் (அறபு), கல்வி அதிகாரியாகவும் பணியாற்றினார். ஆசிரியராக பணிபுரிந்த வேளை ஆங்கிலம், அறபு, தமிழ் இலக்கணம், இலக்கியம், இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம் போன்ற பாடங்களை மாணவர்களுக்கு போதித்துள்ளார். அரச பணியில் இருந்த போதும் ஆன்மீகப் பணியையும் அவர் முன்னெடுத்து வந்தார்.

“மனிதனை மனிதனாக வாழவைப்பதே அற்புதம். அதனையே முஹம்மது (ஸல்)அவர்கள் செய்தார்கள். அதை தானும் பேணி ஏனையவர்களுக்கும் அடிக்கடி வலியுறுத்துபவராக இருந்தார். குறிப்பாக ஷரீஅத்தைப் பேணி ஐந்து நேரத் தொழுகையையும் பஜ்ருடைய நேரத்தில் குர்ஆன் ஓதுவதையும் கடைபிடித்து வரும்படியும் போதனை செய்தார்.

அன்பால், பண்பால் ஒன்றுபட்ட ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பணிக்காக “ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை” என்ற ஆன்மீக அமைப்பை இலங்கை, இந்தியா உட்பட உலகின் பல நாடுகளிலும் நிறுவி அதனூடாக தமது சீடர்களுக்கு மார்க்க ஞானம் கற்றுக்கொள்வதன் அவசியத்தைப் போதித்தார்.

பெற்றோரை இழந்த மற்றும் கல்வி கற்க வசதியற்ற ஏழைப் பிள்ளைகளுக்கு முற்றிலும் இலவசமாக மார்க்கக்கல்வியையும் உலகக் கல்வியையும் பெற்றுக்கொடுக்கவென தமிழகத்தின் திருச்சியில் “மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன்” என்ற அறபுக் கல்லூரியை நிறுவி அதன் வெற்றிகரமான செயற்பாட்டுக்கு வழிவகுத்துள்ளார். அத்தோடு அவ்னிய்யா பப்ளிக் ஸ்கூல் எனும் பெயரில் நவீன வசதிகளுடன் கூடிய ஆங்கில மொழிமூல பாடசாலையையும் நிறுவியுள்ளார். ஏழை எழியவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கிலும் இயற்கை அனர்த்த வேளைகளின் போது உடலாலும் பொருளாலும் உதவிகளைச் செய்யவுமென அவ்னிய்யா என்ற உலக அமைதி அறக்கட்டளை ஒன்றையும் நிறுவி பணிகள் பல்லாண்டு காலமாக முன்னெடுக்கப்படுகிறது.

இவ்வாறு நாட்டுக்கும் மக்களுக்கும் அளப்பரிய சேவையாற்றியுள்ள ஸெய்யத் அவ்ன் கலீல் மௌலானா (ரஹ்) ஆன்மீகத் துறைக்கு ஆற்றியுள்ள பங்களிப்புக்களும் அளப்பரியது.

**கலீஃபா எம்.ஜே. முஹம்மது இக்பால்...**
BE MBA FIE Sr.MIEEE(USA) C.Engg PhD.

# மேற்கு அவுஸ்திரேலிய முதல்வர் ரோஜர் குக் ஜனாதிபதியுடன் இருதரப்பு கலந்துரையாடல்


இந்து சமுத்திர மாநாட்டில் பிரதான உரையை ஆற்ற அவுஸ்திரேலியா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மேற்கு அவுஸ்திரேலியாவின் முதல்வர் ரோஜர் குக் (Roger Cook) கை நேற்று (09) பேர்த் நகரில் சந்தித்து உரையாடினார்.

இலங்கைக்கும் மேற்கு அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும், இலங்கைக்கும் பேர்த் நகருக்கும் இடையிலான நேரடி விமான சேவைகளை மேம்படுத்துவதற்கும் முதல்வர் ரோஜர் குக் இணக்கம் தெரிவித்தார்.









புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் காணப்படும் சாத்தியக்கூறுகளை விவரித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் குறித்து விளக்கமளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தத் துறையில் முதலீடுகளை ஊக்குவிக்குமாறும், இலங்கைக்கு விஜயம் செய்து, இந்நாட்டில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராயுமாறும் மேற்கு அவுஸ்திரேலியாவின் முதல்வர் ரோஜர் குக்கிற்கு அழைப்பு விடுத்தார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்திராங்கனி வாகீஷ்வர, பாராளுமன்ற உறுப்பினர்களான சிந்தக மாயதுன்ன, இஷாக் ரஹ்மான், ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் பணிப்பாளர் தினுக் கொழம்பகே மற்றும் ரிஷான் டி சில்வா ஆகியோரும் ஜனாதிபதியுடன் இந்தச் சந்திப்பில் இணைந்து கொண்டனர்.

இந்திய அறக்கட்டளை மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த விஜயத்தில் மேற்கொண்டுள்ளதோடு ஏழாவது இந்து சமுத்திர மாநாடு இன்றும் (10) நாளையும் (11) அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறவுள்ளது.





"நிலையான மற்றும் நிலைபேறான இந்து சமுத்திரத்தை நோக்கி" என்ற தொனிப்பொருளில் நடைபெறும் இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (09) பிரதான உரையை நிகழ்த்தினார். இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நாட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (08) பிற்பகல் பேர்த் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார்.

# விஜய் வருகையினால் தமிழகத்தில் இனிமேல் அரசியல் காட்சிகள் மாறப் போகின்றன!

இந்தியாவில் நடைபெறவிருக்கின்ற 2024 பாராளுமன்றத் தேர்தல் மிகவும் விசித்திரமானதாக இருக்கப் போகின்றது. பலதரப்பினரும் இந்தத் தேர்தலில் பிரிந்து கிடக்கிறார்கள்.

நடிகர் விஜய் சினிமாவில் உச்சத்தில் இருக்கும் போதே தற்போது அரசியலுக்குள் நுழைந்துள்ளார். தற்போது ஒப்பந்தமாகியிருக்கும் இரண்டு படங்களை முடித்துவிட்டு முழுநேர அரசியலில் ஈடுபட நடிகர் விஜய் முடிவு செய்துள்ளார். அவரது அரசியல் வருகையும் தமிழக அரசியலில் சிறிதாவது மாற்றத்தை ஏற்படுத்தத்தான் போகின்றது.

இது தொடர்பாக நடிகர் விஜய் அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

விஜய் மக்கள் இயக்கம் பல வருடங்களாக தன்னால் இயன்ற வரையில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களையும், சமூக சேவைகளையும், நிவாரண உதவிகளையும் செய்துவருவது நீங்கள் அனைவரும் அறிந்ததே. இருப்பினும், முழுமையான சமூக, பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களை கொண்டுவர ஒரு தன்னார்வ அமைப்பினால் மட்டும் இயலாத காரியம் ஆகும். அதற்கு அரசியல் அதிகாரம் தேவைப்படுகிறது.

இவ்வாறு விஜய் கூறியுள்ளார்.

இது ஒருபுறமிருக்க, விஜய்யின் அரசியல் வருகையினால் தமிழகத்தில் 2026 சட்டசபைத் தேர்தலில் அரசியல் கணக்குகள் மாறும் என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

2024 லோக்சபா தேர்தலில் பலதரப்புகளும் மோதப் போகின்றன. யாருக்கு எவ்வளவு வாக்கு வங்கி இருக்கும் என்றே தற்போது தெரியாமல் உள்ளது. எடப்பாடி பழனிச்சாமி தனியாக நிற்கின்றார். அ.தி.மு.கவில் அவரின் தலைமையின் கீழ் எவ்வளவு வாக்கு வங்கி இருக்கும் என்று தெரியாமல் உள்ளது.

இன்னொரு பக்கம் ஓ. பன்னீர்செல்வம் உள்ளார். டி.டி.வி தினகரனுக்கு எவ்வளவு வாக்குகள் உள்ளது என்று கணிக்க முடியாமல் உள்ளது.

அதேபோல் முதல்வர் ஸ்டாலின் ஆட்சிக்கு எதிராக மக்களின் மனநிலை எப்படி இருக்கிறது என்றும் தெரியாமலுள்ளது.

அ.தி.மு.க இல்லாமல் அண்ணாமலை தலைமையில் பா.ஜ.க எப்படி செயல்படும் என்பதும் தெரியாதுள்ளது . நிலைமை இவ்வாறிருக்கையில், தேர்தல் முடிவுகளை கணிப்பது மிக மிக கடினமான விஷயம் என்று தேர்தல் கணிப்பாளர்கள் கூறுகின்றனர். தமிழக சட்டமன்றத் தேர்தல் ஒருபுறமிருக்கையில், 2024 லோக்சபா தேர்தல் மிகவும் விசித்திரமானதாக இருக்கும் என்கிறார்கள் அவர்கள்.

பலர் பாராளுமன்றத் தேர்தலில் பிரிந்து கிடக்கிறார்கள். பலரின் வாக்கு வங்கியை உறுதி செய்வது கடினமாக இருக்கின்றது. 2024 பாராளுமன்றத் தேர்தல் எடப்பாடிக்கு முக்கியம் இல்லை. ஆனால் 2026 தேர்தல் தான் தேவை என்ற மனநிலையில் உள்ளார் அவர். ஆனால் ஒரு தலைவராக தன்னை நிரூபிக்க 2024 தேர்தல் அவருக்குத் தேவை என்பதை மறுக்க முடியாது. இல்லையென்றால் கட்சியில் பன்னீர் செல்வம் வர வேண்டும் என்று குரல்கள் வைக்கப்படலாம். இப்போது எடப்பாடி தனியாக நின்றால் அவர் காலியாகிவிடுவார். பா.ஜ.க அவரை விழுங்கி விடும். கட்சி காணாமல் போய் விடும்.

எடப்பாடி உடனே சுதாரிக்க வேண்டும். இல்லையென்றால் சிக்கல் ஏற்படும். பெரிய கூட்டணி அமைத்து 24 இடங்களையாவது வெற்றி கொள்ள வேண்டும். இதனால் இதில் வெற்றிபெற வேண்டிய கட்டாயம் எடப்பாடிக்கு உள்ளது.

அதேபோல் விஜய் 2026 தேர்தலில் வருகிறார். அப்போது பல காட்சிகள் மாறும் என்பதை மறுப்பதற்கில்லை. விஜய் வந்தால் தேர்தல் சூழ்நிலைகள், வாக்கு வங்கி சிதறல், கூட்டணி கணக்குகள் கூட மொத்தமாக மாறும்.

இது ஒருபுறமிருக்க, லோக்சபா தேர்தலை முன்னிட்டு தமிழகத்தில் கட்சிகள் மாறி மாறி ஆலோசனைகள் நடத்தி வருகின்றன. ஒரு ஆசனம் வாங்கும் கட்சிகள் பா.ஜ.கவுடன்தான் சேரும். பா.ம.க, தே.மு.தி.க போன்ற கட்சிகள் பெரும்பாலும் மத்தியில் ஆட்சியில் உள்ள கட்சியையே விரும்பும். ஏனென்றால் அ.தி.மு.க அதிக இடங்களைக் கொடுக்காது. பா.ஜ.க கூட்டணியில் இருந்தால் அதிக இடங்கள் கிடைக்கும். அதனால் பெரும்பாலும் இந்த கட்சிகள் பா.ஜ.கவுடன்தான் செல்லும்.









**எந்தக் கட்சிக்கு மக்களின் ஆதரவு அதிகமென்பதை ஊகிக்க முடியாத நிலையில் தமிழ்நாட்டின் இன்றைய அரசியல்!**

பா.ஜ.க மீண்டும் ஆட்சிக்கு வரும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அதனால் அமைச்சர் பதவி கூட கிடைக்கும். இன்னொரு பக்கம் அ.தி.மு.க கூட்டணி அமைக்கப் பார்க்கிறது. அ.தி.மு.கவிற்கு ஆதரவாக யாரும் வரவில்லை. அ.தி.மு.கவிற்கான தேர்தல் இது கிடையாது. அவர்கள் அதிக இடம் எடுப்பதால் அவர்களை யாரும் விரும்பவில்லை.

இதேசமயம் லோக்சபா தேர்தலில் கூட்டணி நிலைப்பாடு குறித்து தே.மு.தி.க பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் ஆலோசனை நடைபெற்றது. தே.மு.தி.க மாவட்ட செயலாளர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக்குப் பிறகு செய்தியாளர்களைச் சந்தித்தார் பிரேமலதா.

மறைந்த நடிகர் விஜயகாந்த் 2005 ஆம் ஆண்டு தே.மு.தி.கவை உருவாக்கினார். மறைந்த முன்னாள் முதல்வர்களான கருணாநிதி, ஜெயலலிதா இருவருக்கும் எதிராகவே அரசியல் பயணத்தை தொடங்கினார் விஜயகாந்த். 2006 சட்டசபைத் தேர்தலில் தனித்தே போட்டியிட்டு 8.3% வாக்குகளைப் பெற்றார் விஜயகாந்த். இதனால் தே.மு.தி.க கவனம் பெற்ற கட்சியாக உருவெடுத்தது. 2011 சட்டசபை தேர்தலில் தே.மு.தி.கவுக்கு கிராக்கி அதிகரித்தது.

அத்தேர்தலில் அ.தி.மு.க கூட்டணியில் தே.மு.தி.க 41 தொகுதிகளில் போட்டியிட்டு 29 இல் வென்றது. தே.மு.தி.கவின் வாக்கு சதவீதம் 7.8%. தமிழ்நாட்டு சட்டசபையின் பிரதான எதிர்க்கட்சியாகவும் தே.மு.தி.க அமர்ந்தது. ஆனால் இதுதான் தே.மு.தி.கவின் கடைசி தேர்தலாகவும் அமைந்து போனது துயரமானது.

2016 தேர்தலில் மக்கள் நலக் கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக விஜயகாந்த் முன்னிறுத்தப்பட்டு பெரும் தோல்வியைத் தழுவினார். 2021 தேர்தலிலும் தே.மு.தி.க பெரும் தோல்வியை தழுவியது. இதனால் அ.தி.மு.க, தி.மு.க, பா.ஜ.க என எந்த கட்சிகளும் தே.மு.தி.கவை சீண்டவே இல்லை. டெல்லியில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு அழைப்பு வரும் என காத்திருந்து ஏமாந்து போனது தே.மு.தி.க.

அதேநேரத்தில் தே.மு.தி.க நிறுவனர் விஜயகாந்த் மறைவின் போது பல இலட்சக்கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டு அஞ்சலி செலுத்த அக்கட்சியும் மெல்ல உயிர் பெற்றதாக கருதப்பட்டது. விஜயகாந்த் நல்லடக்கம் செய்யப்பட்ட சில நிமிடங்களில் அவரது மனைவி பிரேமலதா பேசிய பேச்சுகள் அனைவரையும் அதிர்ச்சி அடைய வைத்தது. அந்த அளவு அரசியலாக்கிக் கொண்டிருந்தார்.

தற்போது லோக்சபா தேர்தல் களம் பரபரப்பாகிக் கொண்டிருக்கிறது. தே.மு.தி.கவும் விஜயகாந்த் மறைவால் கவனம் பெற்றிருக்கிறது. தே.மு.தி.கவை எப்படியாவது கூட்டணிக்குள் கொண்டு வர பா.ஜ.க, அ.தி.மு.க இரு கட்சிகளுமே தீவிரமாக முயற்சிக்கின்றன. தே.மு.தி.கவின் பொதுச்செயலாளர் பிரேமலதா இதனை தெளிவாக புரிந்து கொண்டு பேரம் பேசிக் கொண்டே இருக்கிறார்.

பிரேமலதா, தே.மு.தி.கவுக்கு 4 லோக்சபா ஆசனம், 1 ராஜ்யசபா ஆசனம் கொடுத்தால் தான் கூட்டணி என கறாராக சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால் பா.ஜ.கவும் அ.தி.மு.கவும் இதனை ஏற்க முடியாமல் தத்தளிக்கின்றன. இந்த நிலையில்தான் தே.மு.தி.க மாவட்ட செயலாளர்கள் கூட்டம் சென்னையில் நடைபெற்றுள்ளது.

லோக்சபா தேர்தல் கூட்டணி தொடர்பான இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தே.மு.தி.கவுக்கு, தாங்கள் எதிர்பார்க்கும் ஆசனங்களை தரும் கட்சியுடன் கூட்டணி என்றும், கூட்டணி குறித்து இறுதி முடிவெடுக்க பிரேமலதா விஜயகாந்துக்கு அதிகாரம் வழங்குவது உள்ளிட்ட 10 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க, பா.ஜ.க, பா.ம.க உடன் கூட்டணி அமைத்த தே.மு.தி.க, வரும் நாடாளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க அல்லது பா.ஜ.க கூட்டணியில் இணைவது குறித்து ஆலோசனை நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், கூட்டணி குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு பேச்சுவார்த்தை நிறைவு பெற்ற பின் வெளியாகும் என தே.மு.தி.க தலைமை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தே.மு.தி.க பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் இதுபற்றிக் கூறுகையில், "அதிக ஆசனம் தரும் கட்சியுடன் தே.மு.தி.க கூட்டணி அமைக்கும். இதுவரை நேரடியாகவோ மறைமுகமாகவோ எந்தக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. பெரும்பாலான மாவட்ட செயலாளர்கள் தனித்து போட்டியிட விரும்புகின்றனர்" எனத் தெரிவித்தார்.

# பொது போக்குவரத்தில் பெண்கள், சிறுவர் மீதான பாலியல் தொல்லை

## கைதானால் 05 வருட சிறைத் தண்டனை



பொதுப் போக்குவரத்தில் பெண்கள் மீதான பாலியல் தொல்லை மற்றும் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக 05 வருடங்களுக்கு மேல் சிறைத் தண்டனை வழங்குவதற்கான சாத்தியம் உள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

குற்றவியல் சட்டத்தின் 345ஆம் பிரிவுக்கமைய சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

பொதுப் போக்குவரத்தில் பெண்கள் மீது வன்முறைகளில் ஈடுபடுவோர் தொடர்பாக சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் அவர்களை சிவில் உடையிலுள்ள பொலிஸார் கண்காணிப்பதுடன், தமது கமெராவின் உதவியுடன் அச்சம்பவங்களை சாட்சியமாக பதிவு செய்வர். பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை யாராவது ஒருவர் போலி முறைப்பாடு செய்வராயின், அவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் போலி முறைப்பாட்டால் யாராவது பாதிக்கப்படுவாராயின், அது விசாரணையின் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டால், அவர் தமக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்காக இழப்பீட்டை பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

பொதுப் போக்குவரத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் தொல்லை மற்றும் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது, இதுவரை 42 பேர் கைது செய்யப்பட்டனர்.

## ஐக்கிய மக்கள் சக்திக்குள்...

ஜனாதிபதியின் உரையின் போது எழுந்து சென்றனர். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியில் பிளவு ஏற்பட்டமையை நேற்றைய அவர்களின் செயற்பாட்டில் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

ஏனெனில் எதிர்க்கட்சியை சேர்ந்த பலர் சபையில் அமர்ந்துகொண்டே இருந்தனர். இவ்வாறான செயற்பாடுகளால் மக்களை ஏமாற்ற முடியாது" என்றார்.

## சாந்தன் விரைவில்...

நாட்களில் இந்திய அரசாங்கத் தரப்பால் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

பல்வேறு நோய் உபாதைகளால் பாதிக்கப்பட்டுள்ள சாந்தன் தனது சொந்த நாட்டுக்கு தன்னை அனுப்புமாறு கோரியிருந்தார். இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.

## வர்த்தக வங்கிகளுக்கான...

இதை நடைமுறைப்படுத்தும் வகையில் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும், மத்திய வங்கி தெரிவித்தது.

இலங்கை மத்திய வங்கியால், கடந்த வருடம் ஜனவரி 16ஆம் திகதி முதல் நடைமுறையாகும் வகையில் வணிக வங்கிகளுக்கு குறுகிய கால கடன் வழங்குவது தொடர்பாக சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் இந்தக் கட்டுப்பாடுகளை தளர்த்த மத்திய வங்கி தீர்மானம் எடுத்துள்ளது.

இந்தக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதன் மூலம் சந்தையில் வட்டி வீதம் வீழ்ச்சியடையும் வேகம் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்தது.

## இறப்பர் பால் வெட்டும்...

நாட்டில் சுமார் 37 மில்லியன் இறப்பர் மரங்கள் உள்ளதுடன், தொழிலாளர் பற்றாக்குறையால் அவற்றில் 50 சதவீத இறப்பர் மரங்களில் அறுவடை செய்யப்படவில்லை. கணினி மூலம் இயக்கப்படும் இந்த ரோபோ இயந்திரம், ஒரே நேரத்தில் ஒரு கிலோமீற்றர் பரப்பளவில் 20,000 இறப்பர் ஆலைகளை தானாகவே கட்டுப்படுத்தும் திறன் கொண்டதெனவும் தெரியவருகின்றது.

## கொஸ்கொட சுஜீயின்...

தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டதாகவும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர் எனவும் சாமிக என்ற புனைப்பெயர் கொண்டவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சட்டவிரோத துப்பாக்கியை வைத்திருந்த சந்தேக நபர் தொடர்பில் கொழும்பு குற்றப் பிரிவின் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நெவில் டி சில்வாவுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் பொலிஸ் பிரிவு (01) இன் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எஸ்.பி.பி.ஜே.நிஷாந்த உள்ளிட்ட குழுவினர் சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர். விசாரணையின் போது, எஞ்சிய உபகரணங்கள் சந்தேக நபரின் வீட்டுக்கருகிலுள்ள கறுவா தோட்டமொன்றில் வீசப்பட்டிருந்ததாக பொலி ஸா ர் தெரிவித்தனர். சந்தேக நபரிட ம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது வெளிநாட்டில் பதுங்கியிருக்கும் பாதாள உலகக் குழுத் தலைவரான 'கொஸ்கொட சுஜீ' என்றழைக்கப்படும் ஜகமுனி சுஜீ த சொய்சா என்பவரே இந்தத் துப்பாக்கியை வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 2008ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் காலாட்படையில் இணைந்து 2009ஆம் ஆண்டு அதிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட குற்றச்செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளாரா, அண்மைய கொலைகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்கள் என்பனவற்றை கண்டறிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 72 மணிநேர தடுப்புக்காவலில் வைக்க உத்தரவு பெறப்படுமென சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நெவில் டி சில்வா மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் அன்ஸ்லம் டி சில்வா ஆகியோரின் பணிப்புரையின் பேரில், பிரிவு ஒன்றின் நிலைய பொறுப்பதிகாரி SPP நிஷாந்த உள்ளிட்ட குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசியல் கைதிகள் பலர்...

நிர்மலநாதன், இதற்காக தாம் நன்றி தெரிப்பதாகவும் கூறினார். இந்நிலையில் எஞ்சியுள்ள அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு தான் கோருவதாகவும், அவர் தெரிவித்தார்.

விட்டுக்கொடுப்புடன் முன்னோக்கிச் செல்ல வேண்டுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அவ்வாறாயின் ஆனந்த சுகாதரன் போன்ற அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறும், அவர் கோரினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (08) நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றிய போது, "ஆனந்த சுதாகரனுடைய பிள்ளைகளின் நலன் கருதி ஆனந்த சுதாகரனையும் ஏனைய அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். இதற்கு விசேட குழு அமைத்து, கவனம் செலுத்த வேண்டும்" எனத் தெரிவித்தார்.

## கொழும்பு நகரில் இன்று...

5.00 மணி முதல் நீர் விநியோகம் தடைப்படவுள்ளதாகவும், அச்சபை தெரிவித்தது. அம்பத்தலே நீர் விநியோக நிலையத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பராமரிப்புப் பணி காரணமாகவே நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மேலும் தெரிவித்தது.

## 'அஸ்வெசும' இரண்டாம் கட்டம்...

இந்நிலையில் பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைக்கமைய பயனாளிகளைத் தெரிவு செய்யும் போது, சில நிபந்தனைகளை திருத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள் மற்றும் சிறுநீரகக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள தகுதி உடையவர்களுக்கு ஏப்ரல் முதலாம் திகதி முதல் இக்கொடுப்பனவு வழங்கப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ். பல்கலைக்கழக...

தகுதி வாய்ந்த மாணவர்களின் விபரம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினுடைய இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாகவும், பல்கலைக்கழக நிர்வாகம் மேலும் தெரிவித்தது.

## மக்களுக்காக பொதுநலம் கருதி...

அரசாங்கத்தின் செயற்பாடுகளை எதிர்த்துக்கொண்டு தாங்கள் மட்டும் அரசாங்கத்தின் பின்பக்கக் கதவினால் சுய இலாபம் பெறுகின்றார்கள் என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், அந்த வகையில் எமது மக்களுக்கான அரசாங்கத்தின் முன்பக்கக் கதவினை அடைத்துக் கொண்டு நிற்பது வேதனைக்குரியது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான 2 ஆம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இந்த நாட்டின் மீட்பர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்கள் பட்ட துன்ப துயரங்களையும் இனிமேல் அனுபவிக்கப் போகின்ற நன்மைகளையும் ஒரு வரலாற்று அறிக்கையாக தமது கொள்கைப் பிரகடன உரையில் முன்வைத்தார். நாடு பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து இன்னமும் முழுமையாக மீட்சி பெறவில்லை. முழுமையான மீட்சியை நோக்கி தற்போது முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

இதன்போது வலிகள், வேதனைகள் என்பன தவிர்க்க முடியாதவை. கரடு முரடான பாதையைக் கடக்க வேண்டுமென்றால் இவற்றையெல்லாம் எதிர்கொண்டாக வேண்டும். அந்த வகையில் இன்றும் எமது மக்களுக்கான வேதனைகள் இல்லாமலில்லை.

'கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற அருணாசலக் கவிராயரின் பாடலைப் போல் எமது ஜனாதிபதியின் நிலைமை மட்டுமல்ல, எம் அனைவரதும் நிலைமை இவ்வாறுதான் இருந்து வருகிறது. நாம் பெற்ற கடனையும்அடைக்க வேண்டும். பெறுகின்ற கடன்களையும் அடைக்க வேண்டும் என்ற நிலையே காணப்படுகிறது. இந்த நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை மிக அதிகளவில் வலியுறுத்தி வருகின்றவர்களில் நாமும் உள்ளடக்கம். நல்லிணக்கத்தின் மூலமே எமது அன்றாட பிரச்சினை முதல் அரசியல் பிரச்சினை வரையில் அனைத்துப்

பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதில் நம்பிக்கை வைத்து இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்குப் பின் நாம் தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்தோம். அந்த வகையில் எமது அனைத்துப் பிரச்சினைகளையும் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளக்கூடியதொரு காலம் மீண்டும் கனிந்துள்ளதாகவே எனது அனுபவத்தில் நான் உணர்ந்து கொண்டுள்ளேன். அண்மையில் வடக்கு மாகாணத்திற்கு வருகை தந்திருந்த ஜனாதிபதிஎமது மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பது தொடர்பில் காட்டிய அக்கறையினை நாம் மறந்துவிட முடியாது.

மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு குறித்து அதீத அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றவர் அவர். நாட்டில் வாழுகின்ற அனைத்து இன, மத மக்களின் பிரச்சினைகள் குறித்தும் அவர் மிக நன்றாகவே அறிந்து வைத்திருப்பவர். சர்வதேச உறவுகள் தொடர்பில் இறுக்கமான பிணைப்பைக் கொண்டவர்.

பிரச்சினைகளை தீர விடாமல் வழி பார்த்துக் கொண்டு அதையே ஊதி, ஊதிப் பெருப்பித்துக் கொண்டிராமல்அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகள் இருக்கின்ற நிலையில் அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்காக முன்வர வேண்டும்.

போகின்ற வழி கடுமையானது. எனினும் போய்ச் சேர்கின்ற இடம் இனிமையானது. இதில் நாம் அனைவரும் பங்கேற்றால் நமக்கு நாமே விளக்காவது போல் இந்த நாடு நமக்கு விளக்காகும். இந்த வெளிச்சமான பயணத்தில் கறுப்புக் கொடிகளைக் காட்டி மீண்டும் இருளுக்கே வித்திடுவது வரலாற்றில் அவரவர் தத்தமக்கே கரி அள்ளிப் பூசிக் கொள்வது போன்ற செயலாகும்.

எமது மக்கள் நலன் கருதிய இலக்கானது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலேயே நிறைவேற வேண்டும். அது எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, அரசியல் தீர்வுப் பிரச்சினையாகஇருந்தாலும் சரி அனைத்தும் தீர்க்கப்பட வேண்டும்.

இந்த காலகட்டத்ததை நாம் தவற விடுவோமானால் மீளவும் இத்தகையதொரு பொன்னான காலத்தை நினைத்துப் பார்க்கவும் முடியாது. பல சாதனையை நிகழ்த்திக் காட்டி வருகின்ற ஜனாதிபதியால் எமது மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்றில்லை.

அவருக்கு எமது அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்புகள் முழுமையாக கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் அவை சாத்தியமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சபாநாயகருடன் அமெரிக்க தூதுவர்...

இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு ஐக்கிய அமெரிக்க அரசாங்கம், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம் (USAID) மற்றும் தேசிய ஜனநாயக நிறுவனம் ஆகியன ஊடாக பாராளுமன்றத்துக்கு வழங்கிவரும் ஆதரவுகளுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நன்றி தெரிவித்தார். விசேடமாக திறந்த பாராளுமன்ற முன்னெடுப்புக்கான பாராளுமன்ற ஒன்றியம், பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்கள், பாராளுமன்ற ஆய்வுப் பிரிவின் சேவைகள் மற்றும் பொது வெளிக்கள பணிகளுக்கு வழங்கும் உதவிகளுக்கு சபாநாயகர் இதன்போது நன்றி தெரிவித்தார். அத்துடன் புதிய பாராளுமன்றக் கூட்டத்தொடரொன்று ஆரம்பிக்கப்படும் போது மேற்கொள்ளப்படும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றி ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கேட்டறிந்தார். அதற்கமைய அரசாங்க சட்டமூலங்கள், தனியார் சட்டமூலங்கள் மற்றும் ஏனைய பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான எதிர்கால நடைமுறைகள் பற்றி சபாநாயகர் விளக்கமளித்தார்.

இதேவேளை, சட்டவாக்க செயற்பாடுகள் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், ஜனநாயக ஆட்சியின் தூணாக பாராளுமன்றம் மேற்கொள்ளும் முக்கியமான பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையில் ஜனநாயகம், மனித உரிமைகள், முதலீடு, பாதுகாப்பு போன்ற துறைகளில் தொடர்புகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

## ஆஸி. வாழ் இலங்கையருக்கு...

தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுதல் உள்ளிட்ட புதிய கல்வி மறுசீரமைப்பு திட்டங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி இதன்போது அவர்களுக்கு தெளிவூட்டினார். புலம்பெயர் இலங்கையருக்கான அலுவலகம் ஒன்றை பேர்த் நகரில் ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக இங்கு சுட்டிக்காட்டிய தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இலங்கை புலம்பெயர் சமூகம் அதனூடாக அரசாங்கத்துடன் வலுவான முறையில் தொடர்புகளை பேண முடியும் என்றும் தெரிவித்தார். கடந்த வருடம் வெளியிடப்பட்ட நிர்வாக தீர்மானங்கள் தொடர்பான அறிக்கை உட்பட சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து விளக்கமளித்த சாகல ரத்நாயக்க, இந்த மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு புலம்பெயர் இலங்கையரின் ஆதரவை தொடர்ந்தும் வழங்குமாறு கேட்டுக் கொண்டார். இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்காக வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ள அரசாங்கம் ஆரம்பித்திருக்கும் வேலைத்திட்டம் குறித்து வெளிநாட்டமைச்சர் அலி சப்ரியும் இங்கு விளக்கமளித்தார்.

## தலைவராக மீண்டும்...

நியமிக்கப்பட்டுள்ளார் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் அறிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது அவர் அந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரில் அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவராக பதவி வகித்த ஹர்ஷ டி சில்வா, ஐந்தாவது கூட்டத்தொடர் ஆரம்பமானதையடுத்து அந்த குழுவின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களான செஹான் சேமசிங்க, சீதா அரம்பேபொல,கலாநிதி சுரேன் ராகவன், அனுப பஸ்குவல், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரவூப் ஹக்கீம், வஜிர அபேவர்தன, விஜித ஹேரத், மஹிந்தானந்த அலுத்கமகே, துமிந்த திசாநாயக்க, சந்திம வீரக்கொடி, நாலக கொடஹேவா, நிமல் லான்சா, எம்.ஏ.சுமந்திரன், கவிந்த ஹேஷான் ஜயவர்தன, மயந்த திசாநாயக்க, ஹர்ஷண ராஜகருணா, யூ.கே. சுமித் உடுகும்புர, மேஜர் பிரதீப் உந்துகொட, இசுரு தொடங்கொட, பிரேம்நாத் சி.தொலவத்த, மதுர விதானகே, எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான ஆகியோரும் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் சபாநாயகர் சபையில் தெரிவித்தார்.

## ஜனாதிபதி ரணில் அவுஸ்திரேலிய...

அதிகாரத் தளங்கள் மாறுவதன் மூலம், பிராந்தியத்தில் அவுஸ்திரேலியாவுடனான உறவுகளை மேம்படுத்துவது ஒரு முக்கியமான படியாகும் என்று சுட்டிக்காட்டினார். புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையில் இலங்கையில் காணப்படும் புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் விளக்கமளித்த ஜனாதிபதி, அத்துறையில் ஏற்கனவே பல அவுஸ்திரேலிய நிறுவனங்கள் முதலீடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். "கொழும்பு முறைமை" வரையிலான இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான வரலாற்று உறவுகள் குறித்து இங்கு நினைவுகூரப்பட்டதுடன், பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பல புதிய துறைகளின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரும் கலந்துரையாடினர்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்ராங்கனி வாகீஷ்வர, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் பணிப்பாளர் தினுக் கொழம்பகே மற்றும் ரிஷான் டி சில்வா ஆகியோர் இதன்போது உடனிருந்தனர்.

# இன்றைய பலன்கள் (10.02.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
தடை தாமதங்களால் சில காரியங்களில் பின்னடைவு ஏற்படலாம். உத்தியோகத்தில் தொல்லை இருந்தாலும் அவற்றை பொறுத்துக் கொண்டு முக்கிய வேலைகளை செய்து முடிப்பீர்கள்.

**ரிஷபம் :**
வாக்குறுதி கொடுப்பதை தவிர்க்கவும். உத்தியோகத்தில் சிலருக்கு உயர் அதிகாரிகளால் நன்மை உண்டாகும்.

**மிதுனம்:**
உத்தியோகத்தில் வழக்கமான வேலையை செய்ய முடியாமல் புதிய வேலைகளை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும்.

**கடகம்:**
பண விஷயங்களில் சிலரிடம் கண்டிப்பாக நடந்து கொள்ளும்படி ஆகலாம். உத்தியோகத்தில் சிலருக்கு பதவி உயர்வும் சம்பள உயர்வு கிடைக்கும்.

**சிம்மம்:**
கிடைக்க வேண்டிய சலுகைகள் கொஞ்சம் தாமதமாக கிடைக்கலாம். வெளியூர் பயணங்கள் செல்ல திட்டமிடுவீர்கள்.

**கன்னி:**
முக்கிய பிரமுகர் ஒருவர் உங்களுக்கு பக்கபலமாக இருப்பார். வரவேண்டிய பணவரவு தேவையான பொழுது வந்து சேரலாம்.

**துலாம்:**
எதிர்பார்க்கும் பண வரவு திட்டமிட்டபடி வந்து சேரும். உத்தியோகத்தில் எதிர்பார்க்கும் சலுகைகள் கிடைக்கப்பெறும்.

**விருச்சிகம்:**
எதிர்பார்க்கும் தன வரவு தாமதம் இன்றி வந்து சேரும். சிலருக்கு இல்லை என்று சொல்லாமல் இயன்ற உதவிகளை செய்வீர்கள்.

**தனுசு:**
திட்டமிட்ட பண வரவு வந்தாலும் செலவு அதிகரிக்கும் லாபகரமான வாழ்க்கைக்கு அடிமைத்தளம் அமைப்பீர்கள்.

**மகரம்:**
வரவேண்டிய பணம் வந்து சேர்ந்தாலும் செலவு அதிகமாக இருக்கலாம். வெளியில் செல்லும்போது எதிர்பாராமல் முக்கிய நபரை சந்திக்கலாம்.

**கும்பம்:**
எதிலும் தீர்க்கமாக ஆலோசித்து செயற்படுவது நல்ல பலனை கொடுப்பதோடு பிரச்சினைகளையும் தவிர்க்கும். உத்தியோகத்தில் பொறுப்பு கூடும்.

**மீனம்:**
தீவிர முயற்சியோடு காரியங்களில் ஈடுபடுவீர்கள். சில காரியங்களில் தளர்வு இருந்தாலும் முக்கியமானவற்றில் வெற்றி பெறுவீர்கள்.

## 12 கிலோ பீட்சா தயாரித்து...

ஹோட்டல் நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். 50 அங்குல நீளமும் 12 கிலோ நிறையும் கொண்டதாக பீட்சாவை ஹோட்டலின் ஊழியர்கள் தயாரித்துள்ளதுடன், அதை 08 நிமிடங்களில் பேக் செய்ததாகவும், அவர்கள் தெரிவித்தனர். உலக பீட்சா (Pizza) தினம் பெப்ரவரி 09ஆம் திகதியாகும்.

அக்ஹோட்டலின் நிறைவேற்று சமையல் கலைஞர் துமிந்த வணிகசேகர இதற்கான முயற்சியை எடுத்து, இலங்கையில் மிகப்பெரிய பீட்சாவை தயாரித்துள்ளார். தக்காளி, மொஸரெல்லா சீஸ், கோழி இறைச்சி, 04 வெவ்வேறு நிறங்கள் மற்றும் சுவையூட்டி கொண்ட பெல் பெப்பர்ஸ், ஆலிவ் எண்ணெய், பச்சை வெங்காயம் ஆகிய கலவைகள் இதற்காக சேர்க்கப்பட்டன. இதுவரையில் ஹோட்டலுக்கு 100 க்கும் மேற்பட்டோர் பீட்சாவை உட்கொள்வதற்காக வருகை தந்துள்ளதாகவும், ஹோட்டல் நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

## அரசு எடுக்கும் தீர்மானங்களுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

சகல தரப்பினருக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். ஒரு சில காரணங்களை மாத்திரம் வரையறுத்துக்கொண்டு பொருளாதார பாதிப்பை அளவிட முடியாது. பூகோள ரீதியான காரணங்கள் பொருளாதார பாதிப்புக்கு பிரதான காரணங்களாக அமைந்தது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரசாங்க ஊழியர்கள் எவரையும் சேவையில் இருந்து நீக்கவில்லை. முறையான முகாமைத்துவத்துடன் அரச அவர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாதம் முதல் கொடுப்பனவுகளை முழுமையாக அதிகரிக்க அவதானம் செலுத்தியுள்ளோம். அதேபோல் ஓய்வூதியம் பெறுநர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ஜோர்தானில் நிர்க்கதியான... 03ஆம் பக்கத் தொடர்

ஜோர்தானில் இந்தத் தொழிற்சாலைகளை நடத்தி வந்த இந்திய முதலீட்டாளர்கள், அங்கு பணியாற்றிய ஊழியர்களுக்கு தெரிவிக்காமல் தொழிற்சாலைகளை மூடியதாக தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும் இந்த தொழிற்சாலைகளில் பணியாற்றிய மேற்படி குழுவினர் தமக்கான அனைத்து சலுகைகளையும் பெற்றுக் கொண்டு நாடு திரும்பினர். இவர்கள் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

## மார்ச் மாதத்துக்குப்... 03ஆம் பக்கத் தொடர்

விநியோகத்தை பேண முடிந்துள்ளது. தற்போது மிகப் பெரியளவிலான எரிபொருள் கையிருப்பு வைத்திருக்கிறோம். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் டொலர் சேமிப்பையும் எம்மால் பேண முடிந்துள்ளது. வலுசக்தி தேவைக்காக 200 மில்லியன் டொலர் மேலதிக கையிருப்பு மற்றும் ஒரு வாரத்துக்கு அவசியமான டொலரை அதே வாரத்தில் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கிறோம். டெண்டர் முறையின்படி அடுத்த 6 மாதங்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ள நீண்டகால ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழக்கமான முறைப்படி டெண்டர் முறையிலேயே எரிபொருளை கொள்வனவு செய்து வந்தது. ஆனால், எதிர்காலத்தில் டெண்டரைக் கோருவதற்கு ஏல விற்பனை முறையை அறிமுகப்படுத்த நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்"என்றார்.

## ஜனாதிபதி ரணில்... 03ஆம் பக்கத் தொடர்

போட்டியிடுவோம். நாட்டைக் கட்டி எழுப்புவதில் ஒன்றிணைவோம் என்ற ஜனாதிபதியின் அழைப்பையே நான் மீண்டும் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன். இந்த நாடு அனைத்து நிலைகளிலும் வீழ்ந்திருந்த நிலையில், இந்த நாடு இத்தனைக் குறுகிய காலத்துள் இந்தளவு எழுந்திருக்கும் என எவரும் எண்ணியிருக்க மாட்டார்கள். அது இன்று சாத்தியமாக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய சாதனையை நிகழ்த்திக் காட்டி வருகின்ற ஜனாதிபதி அவர்களால், எமது மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது என்றில்லை. அவருக்கு எமது அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்புகள் முழுமையாக கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் அவை அனைத்தும் சாத்தியமாகும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. அந்த நம்பிக்கையை நிறைவேற்ற அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து, ஜனாதிபதிக்கு ஒத்துழைப்புகளை வழங்க வேண்டுமென மீண்டும் வலியுறுத்துவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



ஊடகவியலாளர்களுக்கான

## காப்புறுதித் திட்டம் விரைவில் அறிமுகம்





(கிண்ணியா மத்திய, றொட்டவெவ குறூப், திருகோணமலை தினகரன் நிருபர்கள்)

இடைநிறுத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான காப்புறுதித் திட்டத்தை அடுத்த ஆண்டு மீண்டும் அமுல்படுத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக ஊடக அமைச்சின் செயலாளர் வி.பி.கே. அனுஷா பெல்பிட்ட தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சினால், ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் (UNDP) கீழ், கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இந்நிகழ்வை (8) ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர் பட்டய நிறுவனத்தை உருவாக்குவதற்கு ஊடக அமைச்சு சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறது. இது அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப் பட்டாலும், ஒரு சுதந்திர ஊடக நிறுவனமாகவே அது இருக்கும். அதற்கான சட்ட வரைவு தயாரிக்கப்பட்டிருக்கிறது. சட்டமா அதிபருக்கும் அனுப்பப் பட்டு, ஆறு மாதங்களில், அவற்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இப்பட்டய நிறுவனத்தின் மூலம் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். ஊடகவியலாளர்களின் தொழில்வாண்மை விருத்திக்கு உதவி புரியும், தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப ஊடகவியலாளர்கள் மாறுவது போன்ற அனுகூலங்கள் கிடைக்கும்.

ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்க நெறி கோவையை, ஊடகவியலாளர்களே உருவாக்க வேண்டும். இதனை அமைச்சரோ அமைச்சோ செய்து வழங்குவது, உங்களுக்கு கௌரவமாகாது.

முழுநேர ஊடகவியலாளர்களுக்கு ஓய்வூதிய திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் ஊடக அமைச்சு யோசனையொன்றைக் கொள்கை அளவில் முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தங்குமிட வசதியுடன் கூடிய இரண்டுநாள் வேலைத்திட்டமாக இது செயற்படுத்தப்படும். இப்பயிற்சிப்பட்டறையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 50 ஊடகவியலாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். திருகோணமலை அலெக்ஸ் தோட்டம் அனந்தம ஹோட்டலில் இச்செயலமர்வு நடைபெற்றது.

இச்செயலமர்வின் அதிதி உரையை கிழக்கு பல்கலைக்கழக மொழி மற்றும் தொடர்பாடல் திணைக்களத் தலைவர் கலாநிதி வ. ஜே. நவீன் ராஜ் வழங்கினார்.

## வவுணதீவில் உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகத்தின் அனுசரணையில் வழங்கப்பட்ட அனர்த்த நிவாரண உலர் உணவுப்பொதிகள் வழங்கும் நிகழ்வு மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் த.சத்தியானந்தி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 100 பயனாளிகளுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர், சிவில் சமூக அமைப்பின் தலைவர் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.



சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலயத்திற்கு மர்ஹூம் மயோன் முஸ்தபா ஞாபகார்த்தமாக பல் ஊடக அபிவிருத்திப் பிரிவு திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் றிஸ்லி முஸ்தபா கல்வி எயிட் அமைப்பின் தவிசாளர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

(படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

## அம்பாறை மாவட்டத்தில் துரித நெல் அறுவடை

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் சகல விவசாயக் கண்டங்களிலும் துரித அறுவடை இடம்பெறுவதோடு தனியார் நெல்லை கொள்வனவும் செய்கின்றனர்.

குறிப்பாக சடயந்தலாவ, சவளக்கடை விவசாயக் கண்டங்களில் 66 கிலோ கொண்ட நெல் மூடை காய்ந்த நெல் ஆறாயிரம் ரூபாவுக்கும் காயாத நெல் ஐயாயிரம் ரூபாவுக்கும் தனியாரால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றன.

அடைமழையால் ஏற்பட்ட பெரு வெள்ளம் வேளாண்மையில் தாக்கத்தை ஏற்படுத்திய நிலையில் கிடைத்த அறுவடை போதிய இலாபத்தை தரவில்லையென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கம் உத்தரவாத விலையில் நெல்லை கொள்வனவு செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு இலாபம் இல்லாவிடினும் மூலதனத்தைக்கூட காப்பாற்ற முடியுமெனவும் மேலும் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் விவசாயிகளிடமிருந்து குறிப்பிட்ட நெல்லை கொள்வனவு செய்ததாகவும் மேலும் குறிப்பிட்டனர்.

இதேவேளை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு மிகப்பாதிப்படைந்து நிற்கும் விவசாயிகளுக்கு அரசு நஷ்டஈடு வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## அலிசாஹிர் மௌலானாவுடன் இந்திய துணைத் தூதுவர் சந்திப்பு



(சாய்ந்தமருது விசேட நிருபர்)

கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலய துணைத் தூதுவர் கலாநிதி சத்யஞ்சல் பாண்டே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அலி சாஹிர் மௌலானாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பு மட்டக்களப்பிலுள்ள விடுதியொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் சமகால விவகாரங்கள், அபிவிருத்தி, சமூக, கல்வி, கலாசார மற்றும் பொருளாதார விடயங்கள் குறித்து துணைத் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக எடுத்துக் கூறிய பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா, அவற்றுக்கான தீர்வு முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடினார்.

இவ்வாறான விடயங்களில் இந்தியாவின் வகிபாகம் தொடர்பில் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாகவும் இச்சந்திப்பு திருப்திகரமாக அமைந்திருந்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

## கல்லரிப்பு பழங்குடிக் கிராமத்தில் வள்ளுவம் பொங்கல் விழா






(காரைதீவு குறூப் நிருபர்)

வாகரை வெருகல் கல்லரிப்பு பழங்குடிக் கிராமத்தில் வள்ளுவம் அமைப்பின் ஏற்பாட்டில் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அடிப்படை வசதிகளின்றி பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழும் மக்களுக்கு வள்ளுவம் அமைப்பினால் பொங்கலுக்கென புதிய ஆடைகள், பொங்கல் பானை முதல் சகல பொருட்களையும் வழங்கி இப்பொங்கல் விழாவை நடத்தி வைத்தனர். அங்கு மலையக மக்களின் 200 வருட வாழ்வியல் சரித்திரத்தை பிரதிபலிக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கொழுந்து பறித்தல் தொடக்கம் மலையக கலை கலாசார பாரம்பரியங்களை பறைசாற்றும் வகையில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாடசாலை, வைத்தியசாலை, வீதி என எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி வாழும் கல்லரிப்பு கிராமத்தில் சுமார் 40 பழங்குடி குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

## கல்முனை பிரதேசத்தில் திண்மக்கழிவுகள் சேகரிப்பு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



கல்முனை பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக கடற்கரையோரங்களில் சேர்ந்துள்ள பிளாஸ்டிக் போன்ற உக்காத திண்மக்கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்காரணமாக கரைவலை மீன்பிடியில் ஈடுபடுவோரும், பொழுதுபோக்குக்காக கடற்கரையோரங்களுக்கு செல்வோரும் பல விதமான இன்னல்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இதனை கருத்திற்கொண்டு கல்முனை இளைஞர் அமைப்பும் பிரதேசமக்களும் இணைந்து விஷ்ணு கோயிலுக்கு முன்பாக சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

பெண்கள் சிலர் கையில் பதாகைகளை ஏந்தி சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பால்நிலை சமத்துவம் செயலமர்வு



(காரைதீவு குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பால்நிலை சமத்துவம் மற்றும் உளநலன், உளவியல் நடத்தைசார் அணுகுமுறைகள் தொடர்பான செயலமர்வு நேற்று நடைபெற்றது.

அமைப்பின் தலைவி திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக உளநல ஆற்றுப்படுத்துனர் ஏ.சுதர்சன் விளக்கவுரையாற்றினார்.

இதில் அமைப்பின் இணைப்பாளர் மற்றும் கள உத்தியோகத்தர், திட்ட இணைப்பாளர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரியாக டொக்டர் உவைஸ் பாரூக் நியமனம்

(ஒலுவில் விசேட, அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்)



பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரியாக டொக்டர் உவைஸ் பாரூக் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

பொத்துவில் சின்ன உல்லை சவாளை ஆரம்ப மருத்துவ பிரிவில் கடமையாற்றிய இவருக்கான நியமனக் கடிதத்தை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸதீன் வழங்கி வைத்தார்.

தனது ஆரம்ப கல்வியை பொத்துவில் தாறுல் பலாஹ் முஸ்லிம் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை அல் இர்பான் வித்தியாலயத்திலும் உயர்கல்வியை மருதமுனை அல் மனார் வித்தியாலயத்திலும் பெற்றுக்கொண்ட இவர் தனது பல்கலைக்கழக கல்வியை கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பெற்றுக்கொண்டு வைத்தியராக வெளியேறினார்.

இவர் தனது உள்ளக பயிற்சியை 2020 முதல் 2021 வரை கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையிலும், களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் கொரோனா அதிதீவிர சிகிச்சை பிரிவிலும் கடமையாற்றினார். திருக்கோவில் ஆதார வைத்தியசாலை, பொத்துவில் ஆதார வைத்தியசாலை, கோமாரி ஆரம்ப மருத்துவ பிரிவு பொத்துவில் சின்ன உல்லை சவாளை ஆரம்ப மருத்துவ பிரிவுகளில் வைத்தியராக கடமையாற்றியுள்ளார்.



இலங்கை அதிபர் சேவையின் தரம் 3 இற்கு தெரிவு செய்யப்பட்டு கமு/கமு/சேனைக்குடியிருப்பு கணேஷா மகா வித்தியாலய பிரதிஅதிபராக நியமிக்கப்பட்ட திருமதி. வாசுகி ஜங்கரனை வரவேற்கும் நிகழ்வு நேற்று பாடசாலை அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். (படம்: துறைநீலாவணை நிருபர்)

# தமது விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்குள் காலடி வைக்கும் Socomec India




Low Voltage (LV) மின்சார முகாமைத்துவத்தில் உலகளாவிய முன்னணி நிபுணரான Socomec India நிறுவனம், அதன் முக்கிய விரிவாக்கத் திட்டத்தை வெளியிட்டுள்ளது. சென்னையை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் பிரான்சைச் சேர்ந்த வலுசக்தி நிறுவனமான Socomec India, இலங்கை சந்தைக்குள் உடன் அமுலுக்கு வரும் வகையில் நுழைகின்றது. 'Greater India' என்று அழைக்கப்படும் இந்த மூலோபாய நடவடிக்கையானது, ஒருங்கிணைந்த ஒரு தனியான வணிக நிறுவனமாக அதனை ஒருங்கிணைக்கும் வகையில், Socomec India விற்கு ஒரு குறிப்பிடத்தக்க சாதனையை குறிப்பதோடு, அதன் வணிக மேம்பாட்டுக்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது.

இந்த விரிவாக்கம் தொடர்பில், Socomec India முகாமைத்துவ பணிப்பாளர் மீனு சிங்கால், கருத்து வெளியிடுகையில், "ஆசிய சந்தையில் புத்தாக்கமான வலுசக்தி தீர்வுகளை வழங்கி வருவதன் மூலம் அதிகரித்து வரும் வலு சக்தி தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நாம் அதிக அர்ப்பணிப்புடன் இருந்து வருகின்றோம். ஐரோப்பாவில் பொறியியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு, இந்தியாவில் பெருமையுடன் தயாரிக்கப்படுகின்ற எமது தயாரிப்புகள், இலங்கை மற்றும் பங்களாதேஷ் சந்தைகளில் அதிக தாக்கத்தை ஏற்படுத்த தயாராக உள்ளன. இந்த விரிவாக்கமானது, 'Make in India' திட்டத்திற்கான எமது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துவதோடு, ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் Socomec நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய மையமாக இந்தியா செயற்படுகிறது. எமது தயாரிப்புகளின் தரநிலைகள், உலகளாவிய தரத்திற்கு ஏற்ப பேணப்படுவதன் காரணமாக இந்தப் பயணம் எளிதாக்கப்படுகின்றது. நீண்ட காலம் நீடிக்கக் கூடிய கூட்டாண்மைகளை உருவாக்கவும், நிலைபேறான மற்றும் திறனான வலு சக்தி தீர்வுகள் மூலம் வணிக நிறுவனங்களை மேம்படுத்தவும் நாம் எதிர்பார்க்கின்றோம். இதன் மூலம் இத்தொழில்துறையில் ஒரு நம்பகமான முன்னணி நிறுவனம் எனும் Socomec இன் பெயரை மேலும் வலுப்படுத்துகிறோம்." என்றார்.

தமது உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கில், இந்திய சந்தையில் Socomec Group அண்மையில் மேற்கொண்ட 5 மில்லியன் யூரோ முதலீடானது, உள்ளூர் கேள்வியை பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல், இலங்கை மற்றும் பங்களாதேஷுக்கான ஏற்றுமதிகளை பூர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. தடையில்லா மின்சார விநியோகம், Power Switching, கண்காணிப்புத் தீர்வுகள் உள்ளிட்ட புத்தாக்கமான மின்சக்தி தீர்வுகள் மூலம் Socomec India நாட்டை வலுப்படுத்துகிறது. தரவு மையங்கள், உற்பத்தி மற்றும் தயாரிப்புத் தொழில்துறைகள், சுகாதாரம், உட்கட்டமைப்பு, வணிகக் கட்டடங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு சக்தி ஆகியவற்றிற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ள இந்தத் தயாரிப்புகள் யாவும், அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றன. தற்போது தனது இருப்பை உள்ளூரில் ஏற்படுத்துவதன் மூலம், இந்த தயாரிப்புகள் யாவும், இலங்கை மற்றும் பங்களாதேஷ் சந்தைகளில் தற்போது கிடைக்கவுள்ளன. இந்த விரிவாக்கத்தின் மூலம், எதிர்வரும் 3 வருடங்களுக்குள் இப்பிராந்தியத்தில் தனது வருமானத்தை இரட்டிப்பாக்க Socomec India இலக்காகக் கொண்டுள்ளது.

இந்த முக்கிய வளர்ச்சித் திட்டத்தை வலுப்படுத்தும் வகையில், இலங்கை மற்றும் பங்களாதேஷின் வளர்ந்து வரும் சந்தைகளில், நிறுவனத்தின் திட்டங்களை வழிநடத்தும் பணியை முன்னெடுக்கின்ற பொது முகாமையாளராக, சுஹார்ட் அமித் நியமிக்கப்பட்டுள்ளதை Socomec பெருமையுடன் அறிவிக்கிறது. பல்வகைத் துறை சந்தைப் பிரிவுகளில் 25 ஆண்டுகளுக்கும் மேலான பெருமை மிக்க தொழில் அனுபவத்தைக் கொண்டுள்ள சுஹார்ட் அமித், இந்த மாற்றமுறும் சந்தைகளில் Socomec நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கான முக்கிய செயற்பாட்டாளராக செயற்படுவார்.

இந்த அற்புதமான விரிவாக்கப் பயணத்தை Socomec India ஆரம்பிக்கும் இவ்வேளையில், விசேடத்துவமான மற்றும் புத்தாக்கமான வலுசக்தி முகாமைத்துவத்தை வழங்குவதற்கு நிறுவனம் ஏற்கனவே அர்ப்பணிப்புடன் இருந்து வருகின்றது. நிலைபேறான தீர்வுகள் மற்றும் சிறந்த தரத்திற்கான அர்ப்பணிப்பு ஆகியன, இலங்கை மற்றும் பங்களாதேஷில் உள்ள வணிக நிறுவனங்களுக்கு நன்மையளிப்பதோடு மாத்திரமல்லாமல், இப்பிராந்தியங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்யும்.

இந்த நடவடிக்கையானது, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதன் மூலம், தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் (SAARC) முயற்சிக்கு பங்களிப்புச் செய்கின்றது. 'Greater India' திட்டத்தின் தூர நோக்கானது, எல்லை தாண்டிய வர்த்தகம் மற்றும் சார்க் நாடுகளுக்குள் ஒத்துழைப்புக்கான ஊக்கியாக Socomec நிறுவனத்தை நிலைநிறுத்துகின்றது.

தினகரன் வர்த்தக உலா
shumsfahim@gmail.com | சமலை பாஹிம

## HNB Finance PLC இன் புதிய தலைவராக ரஜீவ் திஸாநாயக்க நியமனம்



2024 ஜனவரி 8 முதல் HNB FINANCE PLC இன் புதிய தலைவராக ரஜீவ் திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். 2021 ஆம் ஆண்டு முதல் HNB FINANCE இன் தலைவராக கடமையாற்றிய டில்ஷான் றொட்ரிகோவிற்குப் பின்னர் ரஜீவ் திஸாநாயக்க அதன் புதிய தலைவராக செயற்பட்டு வருகிறார். புதிய தலைவராக நியமிக்கப்பட்ட ரஜீவ் திசாநாயக்க, 2017 ஆம் ஆண்டு முதல் HNB FINANCE இன் பணிப்பாளர் சபை உறுப்பினராக இருந்து வருகிறார். இதற்கு முன், தணிக்கை மற்றும் இடர் முகாமைத்துவ பணிப்பாளர் குழுவின் தலைவராகவும் இருந்துள்ளதுடன், இன்று, அவர் மூலோபாய மற்றும் முதலீட்டு மறுஆய்வுக் குழுவின் தலைவராக பணியாற்றி தனது சிறந்த பங்களிப்பை வழங்கி வருகிறார்.

ரஜீவ் திஸாநாயக்க வங்கி மற்றும் மூலதனச் சந்தைகளில் 20 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டவர். அவர் தற்போது HNB இல் சிறு, நடுத்தர மற்றும் சிறு நிதிகளின் துணை பொது முகாமையாளராகவும் பணியாற்றுகிறார். இதற்கு முன்னர், அவர் HNB இன் தலைமை நிதி அதிகாரியாகவும், தலைமை வியூக அதிகாரியாகவும் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றினார்.தலைவர் என்ற வகையில், ரஜீவ் திஸாநாயக்க, HNB FINANCE நிறுவனத்தை அதன் செயல்பாடுகளை நெறிப்படுத்துவதன் மூலமும், வணிக வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில் சந்தை மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றியமைப்பதன் மூலமும் வழிகாட்டுவார். அவர் தனது அனுபவத்தைப் பயன்படுத்தி, நிறுவனத்தின் நிதித் துறையை மேலும் வலுப்படுத்துவார் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்க வழிகாட்டுவார். HNB FINANCE இன் தலைவர் எனும் பதவியைத் தவிர, திஸாநாயக்க Acuity Partners (Pvt.) Ltd, Lanka Venture PLC மற்றும் Lanka Energy Fund PLC ஆகியவற்றின் பணிப்பாளராகவும் பணியாற்றுகிறார். அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் பட்டம் பெற்றவர். CFA தகுதியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிபுணராக இருப்பதுடன், பட்டய நிர்வாகக் கணக்காளர்களின் உறுப்பினராகவும், பட்டய உலகளாவிய முகாமைத்துவக் கணக்காளராகவும் அவர் தனது தொழில்முறை திறன்களை வளர்த்துக் கொண்டார்.

## AICPA® & CIMA® தொழில் தினம் பெப்ரவரி 12 ஷங்கிரி–லா ஹோட்டலில்

எப்பொழுதும் பரிணாம வளர்ச்சி கண்டு வருகின்ற தொழில்ரீதியான வளர்ச்சியில், வெறுமனே தொழில் வாய்ப்புக்கள் மட்டுமல்லாது, பெறுமதிமிக்க நுண்ணறிவுகள், அர்த்தமுள்ள தொடர்புகள் மற்றும் புதிய தொழில் மார்க்கங்களை ஆராய்வதற்கான வாய்ப்புக்கள் அடங்கிய ஒரு முழுமையான அனுபவத்தையே அனேகமானோர் பெரும்பாலும் நாடுகின்றனர்.

2024 பெப்ரவரி 12 ஆம் திகதியன்று கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டல் லோட்டஸ் நிகழ்வு மண்டபத்தில் இடம் பெறவுள்ள AICPA® & CIMA® தொழில் தினம், தமது தொழில்களை மேம்படுத்த வேண்டும் என்ற அபிலாஷையைக் கொண்டவர்களுக்கு கலங்கரைவிளக்கமாக மாறவுள்ளது.

American Institute of CPAs (AICPA) உடன் இணைந்து உலகளவில் அண்ணளவாக 700,000 வரையான AICPA மற்றும் CIMA அங்கத்தவர்கள், பணிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் மற்றும் தொழில்புரிபவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு சர்வதேச ஸ்தாபனமான Association of International Certified Professional Accountants இன் ஸ்தாபக உறுப்பினரே CIMA ஆகும். இந்நிகழ்வானது வெறுமனே ஒரு ஒன்றுகூடல் என்பதற்கு அப்பால், தொழில்ரீதியான முன்னேற்றம், புதிய தொழில் வாய்ப்புக்களை ஆராய்தல் மற்றும் முன்னணி நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்கள் குழுமங்களுடன் பெறுமதிமிக்க தொடர்புகளை உருவாக்கிக்கொள்ளும் வாய்ப்புக்களுக்கான பாதையைத் தோற்றுவிக்கின்றது.

அண்மையில் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர பரீட்சையில் சித்தியெய்தியவரோ, பட்டப்படிப்பினை மேற்கொண்டு வருபவரோ அல்லது ஒரு பட்டதாரியோ என நீங்கள் எந்த நிலையில் இருப்பினும், பல்வகைப்பட்ட தொழில் தேவைகளை இந்நிகழ்வு பூர்த்தி செய்கின்றது.

தொழில்துறைகளில் அனுபவம் வாய்ந்தவர்களால் பகிரப்படுகின்ற விலைமதிப்பற்ற நுண்ணறிவுகளை இந்நிகழ்வில் பங்குபற்றுபவர்கள் பெற்றுக்கொள்வதுடன், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான நவீன போக்குகள் மற்றும் மூலோபாயங்கள் தொடர்பான அறிவையும் பெற்றுக்கொள்ள முடியும்.

## கொள்ளுப்பிட்டியில் மெல்ஸ்டா ஆய்வுகூட மையத்துடன் மருந்தகம் மீண்டும் ஆரம்பம்



தங்களது மருந்தக முயற்சியில் அற்புதமான புதிய அத்தியாயத்தைத் தொடங்கும் வகையில், மெல்ஸ்டா ஹெல்த் (Melsta Health) சமீபத்தில் தங்களது முதன்மையான மெல்ஸ்டா பாமசி (Melsta Pharmacy) ஐ 453, காலி வீதி, கொழும்பு 03 இல் புதிய வடிவம் மற்றும் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் மீண்டும் தொடங்கியுள்ளது.

மெல்ஸ்டா பாமசி (Melsta Pharmacy) இல் புதிய அம்சங்களின் வரிசையை பூர்த்தி செய்யும் வகையில், ஒரு பிரத்தியேக Melsta ஆய்வுகூட மாதிரி சேகரிப்பு மையமும் அதே இடத்தில் தொடங்கப்பட்டது.

கொழும்பின் பரபரப்பான வர்த்தக மையத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள மெல்ஸ்டா பாமசி (Melsta Pharmacy) நகரின் பரபரப்பான சுற்றுப்புறங்களில் ஒன்றின் மைய இடத்தைப் பிடித்துள்ளது. போதுமான வாகன நிறுத்துமிடத்துடன், புதிதாக மீண்டும் தொடங்கப்பட்ட இடம், உள்ளூர்வாசிகள் முதல் வெளியூர்வாசிகள் வரை பல்வேறு வாடிக்கையாளர்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

முதன்மையான மெல்ஸ்டா பாமசி (Melsta Pharmacy) அதன் கவர்ச்சிகரமான, நவீனமயப்படுத்தப்பட்ட, வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வடிவமைப்புடன் தனித்து நிற்கிறது, சமீபத்திய உலகளாவிய தரநிலைகளுடன் தடையின்றி தன்னை மறுசீரமைத்துள்ளது. மருந்து மற்றும் சேவைகளை எதிர்பார்த்த அளவிலும் அதிகமாக வழங்குவதன் மூலம், வாடிக்கையாளர்கள் மிகவும் மலிவு விலையில் சிறந்த சேவைகளுடன் ஒரு விதிவிலக்கான அனுபவத்தை எதிர்பார்க்கலாம்.

உத்தியோகபூர்வ மீள் ஆரம்ப விழாவில் திரு. ரோயல் ஜென்ஸ், துணைத் தலைவர் மெல்ஸ் டாகோர்ப் பிஎல்சி (Melstacorp PLC) தலைவர் மெல்ஸ்டா ஹொஸ்பிடல்ஸ் (Melsta Hospitals) ராகம, சம்பத் பெரேரா, நிர்வாக இயக்குனர் Melstacorp PLC, வைத்தியர் இறைவன் தியாகராஜா, நிறைவேற்று பணிப்பாளர் மெல்ஸ்டா ஹொஸ்பிடல்ஸ் (Melsta Hospitals) ராகம/ மருத்துவமனை நிர்வாகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மெல்ஸ்டா ஹெல்த் (Melsta Health), திருமதி றொஷிற்றா நிறோஷன், பொது முகமையாளர் மெல்ஸ்டா ஹொஸ்பிடல்ஸ் (Melsta Hospitals) ராகம மற்றும் ஜெராட் டேனியல், பொது முகாமையாளர் மெல்ஸ்டா லெப்ஸ் (Melsta Labs) ஆகியோர் பங்கேற்றனர்.

## சுதந்திர தின வாரத்தில் பிறந்த குழந்தைகளுக்கு மக்கள் வங்கியின் பரிசு

மக்கள் வங்கி, சுதந்திரம் கிடைத்து 76 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் வகையில் பிரசவமான குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கியுள்ளது.

மக்கள் வங்கி, 76 ஆவது சுதந்திர தினத்தை மிகவும் எளிமையான வைபவத்துடன் தனது தலைமை அலுவலகத்தில் கொண்டாடியுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து நாடளாவியரீதியில் பல தொடர் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

ஆண்டுதோறும் சுதந்திர தினத்தன்று ஆரம்பிக்கப்படுகின்ற மக்கள் வங்கியின் 'சுதந்திரத்தின் உதயம்' என்ற நிகழ்ச்சித்திட்டமானது இந்த ஆண்டிலும் முன்னெடுக்கப்பட்டது. இந்த கோட்பாட்டின் கீழ், பெப்ரவரி 01 ஆம் திகதிக்கும் 14 ஆம் திகதிக்கும் இடையில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் ரூபா 2,000 பெறுமதியான 'இசுரு உதான' பரிசுச் சான்றிதழை மக்கள் வங்கி அன்பளித்து வருகின்றது.




தேசத்தின் பெருமை உணர்வை ஊக்குவித்து, தமது பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பெற்றோரை ஊக்குவிக்கும் நோக்குடன், 2006 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித்திட்டத்தை மக்கள் வங்கி ஆரம்பித்திருந்தது. குழந்தையின் பிறப்புச் சான்றிதழுடன், இப்பரிசுச் சான்றிதழை உபயோகித்து மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் 'இசுரு உதான' சிறுவர் சேமிப்புக் கணக்கினை ஆரம்பிக்க முடியும். மக்கள் வங்கியின் ஊழியர்கள் வைத்தியசாலைக்கு நேரடியாக வருகை தந்து புதிதாக பிறந்துள்ள குழந்தைகளுக்கு சான்றிதழ்களை பரிசாக வழங்குவது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

காசல் வீதி மகளிர் வைத்தியசாலை மற்றும் பொரளை டி சொய்சா வைத்தியசாலை ஆகியவற்றுக்கு நேரடியாக விஜயம் செய்த மக்கள் வங்கித் தலைவர் சுஜீவ ராஜபக்ச அவர்கள் இதன் அடையாளமாக 'இசுரு உதான' பரிசுச் சான்றிதழ்களையும் ஏனைய பரிசுகளையும் வழங்கி வைத்தார்.

இதை விட, காசல் வீதி மகளிர் வைத்தியசாலையில் சுகாதார வசதிகளை புனரமைப்புச் செய்வதற்கு உதவியாக காசோலையொன்றையும் மக்கள் வங்கி கையளித்துள்ளது.

காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஜித் தந்தநாராயண, பொரளை டி சொய்சா மகளிர் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளரான வைத்தியர் கே.எம். நிஹால், வைத்தியசாலையின் ஊழியர்கள், மக்கள் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் ஏனைய ஊழியர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

மேற்குறிப்பிட்டதற்கு இணங்க, நாட்டிலுள்ள அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளும் 'சுதந்திரத்தின் உதயம்' நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

## அமானா வங்கியின் CIA அமர்வின் தலைவராக நுமைர் காசிம் நியமனம்



அமானா வங்கியின் பிரதம உள்ளக கணக்காய்வாளரான நுமைர் காசிம், வங்கிகளின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் அமர்வின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக வங்கி பெருமையுடன் அறிவித்துள்ளது. வங்கியியல் மற்றும் கணக்காய்வு பிரிவுகளில் நுமைர் கொண்டுள்ள சிறந்த தலைமைத்துவம் மற்றும் சிறப்பு ஆகியவற்றை உறுதி செய்து, அமர்வின் அண்மைய கழக அறிமுக நிகழ்வின் போது இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

உள்ளக கணக்காய்வில் உறுதியான பின்னணிப் பதிவைக் கொண்டுள்ள நுமைர், வங்கியின் பிரதம உள்ளக கணக்காய்வாளராக 2017 ஆம் ஆண்டு முதல் இயங்குகின்றார். அதற்கு முன்னதாக இவர் உள்ளக கணக்காய்வு பிரிவின் உதவி பதில் தலைவராகவும், சிரேஷ்ட முகாமையாளராகவும் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அமானா வங்கியுடன் இணைந்து கொள்வதற்கு முன்னதாக, அபு தாபி இஸ்லாமிய வங்கியில் உள்ளக செயன்முறை பகுப்பாய்வாளராக பணியாற்றியுள்ளதுடன், அபு தாபி தேசிய வங்கியில் செயற்பாடுகளுக்கான சிரேஷ்ட அதிகாரியாகவும் பணியாற்றிய அனுபவத்தை நுமைர் கொண்டுள்ளார். CIMA தகைமை பெற்ற முகாமைத்துவ கணக்காளரான நுமைர், Institute of Internal Auditors இன் இலங்கைப் பிரிவின் தலைவராக இயங்குவதுடன், CIMA ஸ்ரீ லங்காவின் உப குழுக்களிலும் அங்கம் வகித்துள்ளார். தமது நியமனம் தொடர்பில் நுமைர் காசிம் கருத்துத் தெரிவிக்கையில், "வங்கிகளின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் அமர்வின் தலைவராக பணியாற்றுவதற்கு எனக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பையிட்டு நான் மிகவும் பெருமை கொள்கின்றேன். கைகோர்ப்பு மற்றும் உள்ளக கணக்காய்வு நியமங்களை மேம்படுத்துவதற்கான எமது வங்கியியல் சமூகத்துக்கான திரண்ட அர்ப்பணிப்பின் எடுத்துக்காட்டாக இந்த நியமனம் அமைந்துள்ளது. துறையில் காணப்படும் சவால்களை தீர்ப்பது தொடர்பில் இந்த நிறைவேற்றுக் குழுவுடன் இணைந்து செயலாற்ற நான் எதிர்பார்ப்பதுடன், அறிவுப் பகிர்வை மேம்படுத்தவும், உள்ளக கணக்காய்வு சிறந்த செயன்முறைகளை வங்கித் துறையில் பரவலாக பின்பற்ற ஊக்குவிக்கவும் எதிர்பார்க்கின்றேன்." என்றார்.

CIA அமர்வின் 6 நிறைவேற்றுக் குழுவில் தலைவராக நுமைர் காசிம் நியமிக்கப்பட்டிருந்ததுடன், உப தலைவராக வருண கொக்கலகே (செலான் வங்கி), செயலாளராக துலான் அபேரட்ன (HSBC) மற்றும் பொருளாளராக ஜயான் பெர்னான்டோ (DFCC) ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர். நிறைவேற்றுக் குழுவின் இதர அங்கத்தவர்களில் சரித்த ஜயவிக்ரம (சம்பத் வங்கி), பதவியை பூர்த்தி செய்து செல்லும் தலைவர் ருவனி டி சில்வா (NDB), கயான் ரணவீர (NTB), ஜெரமி டி சில்வா (PABC), தனஞ்ஜய தயானந்த (SDB) மற்றும் குசல கருணாரட்ன (காகில்ஸ் வங்கி) ஆகியோர் அடங்கியுள்ளனர்.

2015 ஆம் ஆண்டில் மீள நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, வங்கிகளின் பிரதம உள்ளக கணக்காய்வாளர்களின் அமர்வு, அங்கிகாரம் பெற்ற வங்கிகள் மற்றும் அங்கிகாரம் பெற்ற விசேடத்துவ வங்கிகளின் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை ஒன்றிணைக்கும் ஒன்றிபைபு அமைப்பாக திகழ்கின்றது. உறுதியான உறவுகள் மற்றும் ஒன்றிணைந்த செயற்பாடுகளை ஊக்குவித்தல், தொழிற்துறையில் நிலவும் சவால்களுக்கு தீர்வு காணல் மற்றும் உள்ளக கணக்காய்வு நிபுணர்கள் மத்தியில் அறிவு பகிர்வை ஊக்குவித்தல் போன்றவற்றை பிரதான நோக்காகக் கொண்டு செயற்படுகின்றது. உள்ளக கணக்காய்வு நியமங்களை மேம்படுத்துவதில் இந்த அமர்வு முக்கிய பங்காற்றுவதுடன், வங்கியியல் தொழிற்துறையில் சிறந்த செயன்முறைகளை பரவலடையச் செய்வதிலும் பங்காற்றுகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. IsDB குரூப் 'AAA' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 100 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக த ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது.

# இலங்கையின் முதல் வீரராக ஒருநாள் போட்டியில் பத்தும் இரட்டைச் சதம்

## சனத் ஜயசூரியவின் 23 ஆண்டு சாதனை முறியடிப்பு




ஒருநாள் சர்வதேச போட்டி ஒன்றில் இரட்டைச் சதம் பெற்ற முதல் இலங்கை வீரர் என ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்க சாதனை படைத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக பல்லேகலவில் நேற்று (09) நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சார்பில் ஆரம்ப வீரர் பத்தும் நிசங்க ஆட்டமிழக்காது 210 ஓட்டங்களை பெற்றே இந்த சாதனையை படைத்தார்.

முன்னதாக 2000 ஆம் ஆண்டு ஷார்ஜாவில் இந்தியாவுக்கு எதிராக சனத் ஜயசூரிய 189 ஓட்டங்களை பெற்றதே இலங்கை வீரர் ஒருவர் ஒருநாள் போட்டி ஒன்றில் பெற்ற அதிகூடிய ஓட்டங்களாக இருந்தது. இதன்மூலம் 23 ஆண்டுகள் நீடித்த இலங்கையின் சாதனையையே அவர் முறியடித்தார்.

நிசங்க 139 பந்துகளில் 20 பௌண்டரிகள் மற்றும் 8 சிக்ஸர்களுடனேயே இந்த 210 ஓட்டங்களை பெற்றார். இதன்படி ஒருநாள் கிரிக்கெட்டில் இரட்டைச் சதம் பெற்ற 10 ஆவது வீரராகவும் அவர் பதிவானார்.

இதில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணி 50 ஓவர்களுக்கும் 3 விக்கெட்டுகளை இழந்து 381 ஓட்டங்களை பெற்றது. பத்தும் நிசங்கவுடன் அவிஷ்க பெர்னாண்டோ ஆரம்ப விக்கெட்டுக்காக 182 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டார். அவிஷ்க 88 பந்துகளில் 88 ஓட்டங்களை பெற்றார். மத்திய வரிசையில் சதீர சமரவிக்ரம 44 ஓட்டங்களை குவித்தார்.

# டிபேண்ட் ஜமாலியா வெற்றி

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

திருகோணமலை வை.எம்.எம். ஏயினால் நடாத்தப்பட்ட சுதந்திர கிண்ண கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் டிபேண்ட் ஜமாலியா அணி வெற்றிபெற்றது.



சுதந்திர தினத்தை முன்னிட்டு 17 வயதுக்கு உட்பட்ட வீரர்களுக்கு இடையே நடைபெற்ற இந்த போட்டியில் ஏழு அணிகள் பங்கேற்றன.

இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர் எம்.எம்.எம். முக்தார் தலைமையில் ஜமாலியா பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாயன்று (06) நடைபெற்றது இறுதிப் போட்டியில் ஸ்பேன்சஸ் ஜமாலியா அணியை டிபேண்ட் ஜமாலியா அணி 3–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வன்னி ஹோப் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.ரீ.எம். பறாஸ் கலந்து கொண்டார்.

# மரதன் ஓட்டத்தில் சனூஸ் வெற்றி



(மாளிகைக்காடு குறூப், பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்கள்)

அஸ்லம் குளோபல் லங்கா நிறுவனத்தின் அனுசரணையில் பாலமுனை ரைஸ்டார் விளையாட்டுக் கழகத் தலைவர் ஐ.எல்.எம். பாயிஸ் தலைமையில் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் ஏ.எம். சனூஸ் முதலிடத்தை பெற்றார். 76 ஆவது சுதந்திர தினத்தை ஒட்டியும் பலஸ்தீன விழிப்புணர்வுக்காகவும் இந்த மரதன் போட்டி நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் என்.எம். உசாமா இரண்டாம் இடத்தையும், என். நஸீல் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

# இந்தியாவின் விண்வெளி துறை முதலீடு அதிகரிப்பு

இந்தியாவின் விண்வெளித் துறை முதலீடுகளில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள இந்திய மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் கடந்த எட்டு மாதங்களில் ஆயிரம் கோடி ரூபாவுக்கும் மேல் முதலீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் கூறியுள்ளார்.

2040 ஆம் ஆண்டாகும் போது 40 பில்லியன் அமெரிக்க டொலர்களை விண்வெளித் துறைக்கான முதலீடுகளாக ஈர்க்கத் திட்டமிடப்பட்டுள்ள போதிலும் தற்போதைய நிலவரங்களின் படி, அது 100 பில்லியன் டொலர்களைத் தாண்டக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இந்தியாவின் சி.எஸ்.ஐ.ஆர் நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், இந்திய விண்வெளித் துறை உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் முன்னெடுக்கப் பட்டுள்ள சீர்திருத்தங்களின் பயனாக கிடைக்கப்பெறும் முதலீடுகளில் பாரிய அதிகரிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

ஒரு தசாப்தத்திற்கு முன்னர் பத்து பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதி மிக்கதாகக் காணப்பட்ட இந்தியாவின் உயிரியல் பொருளாதாரம் தற்போது 140 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேற்பட்டதாக உள்ளது.

கொவிட் 19 பெருந்தொற்று காலப்பகுதியில் உலகின் பல நாடுகளிலும் இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களைக் காப்பாற்ற எமது தடுப்பூசிகள் பெரும் பங்களிப்பை நல்கியுள்ளன. இன்று நோய் தவிர்ப்பு சுகாதாரப் பராமரிப்பில் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாகவும் எமது நாடு விளங்குகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச செய்திகள்

# பாக். தேர்தலில் இம்ரான் முன்னிலை

பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் சிறை அனுபவித்து வரும் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் ஆதரவாளர்கள் அதிகமான ஆசனங்களை வென்று முன்னிலை பெற்றுள்ளனர்.

எனினும் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தலை அடுத்து கைபேசி சேவைகள் முடக்கப்பட்டிருக்கும் நிலையில் தேர்தல் முடிவுகள் வெளியாவதில் அசாதாரணமான வகையில் தாமதம் நீடித்து வந்தது.

நேற்று பின்னேரம் வரை வெளியான தேர்தல் முடிவுகளின்படி இம்ரான் கானுடன் தொடர்புபட்ட சுயேச்சை வேட்பாளர்கள் 146 ஆசனங்களில் 60 இடங்களை வென்றிருந்தனர். மொத்தம் 265 ஆசனங்களுக்காகவே தேர்தல் இடம்பெற்றது.

முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரீபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் கட்சி 43 இடங்களை வென்றிருப்பதோடு படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் மகனான பிலவால் பூட்டோ சர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 37 இடங்களை வென்றிருந்தது.




இம்ரான் கான் சிறை வைக்கப்பட்டதோடு அவரது பாகிஸ்தான் தஹ்ரீக்கே இன்சாப் கட்சி தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டதால் அவரது ஆதரவாளர்கள் சுயேச்சை வேட்பாளர்களாகவே இந்தத் தேர்தலில் போட்டியிட்டனர்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் குழப்பத்திற்கு மத்தியிலேயே இந்தத் தேர்தல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் தேர்தல் முடிவு வெளியாக தாமதிப்பது வழக்கத்திற்கு மாறானதாகும்.

இந்த நிச்சமற்ற நிலையில் கராச்சியின் பங்குச் சந்தை மற்றும் இறைமை பிணைமுறிகள் வீழ்ச்சி கண்டுள்ளன.

“இணையதள பிரச்சினை” ஒன்றே முடிவுகள் தாமதிப்பதற்குக் காரணம் என்று பாகிஸ்தான் தேர்தல் ஆணைக் குழுவின் விசேட செயலாளர் சபர் இக்பால் தெரிவித்துள்ளார்.

தேர்தலையொட்டி பாதுகாப்பு நடவடிக்கையாக கைபேசி சேவைகள் இடைநிறுத்தப்பட்டதாக அரசு வியாழக்கிழமை கூறியிருந்தது. அது பகுதி அளவு மீண்டுள்ளது.

இதில் கடந்த முறை தேர்தலில் வெற்றியீட்டி தற்போது சிறை அனுபவிக்கும் இம்ரான் கான் ஆதரவாளர்கள் மற்றும் நவாஸ் ஷரீப் கட்சிக்கு இடையிலேயே போட்டி நிலவியது.

தனது கட்சியை ஒடுக்கியதில் நாட்டின் சக்திவாய்ந்த இராணுவம் பின்னணியில் இருப்பதாக இம்ரான் கான் நம்புகிறார்.

மறுபுறம் நவாஸ் ஷரீபுக்கு இராணுவம் ஆதரவு வழங்குவதாக எதிர்க்கட்சியினர் மற்றும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# காசா எல்லை நகரான ரபா மீது இஸ்ரேலின் தாக்குதல் அதிகரிப்பு



## “பேரழிவு” பற்றி அமெரிக்காவும் எச்சரிக்கை

தெற்கு காசாவில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான இடம்பெயர்ந்த மக்கள் நிரம்பியுள்ள எல்லை நகரான ரபா மீது இஸ்ரேல் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது. இந்த நருக்கு படைகளை அனுப்ப இஸ்ரேல் தயாராகி வரும் நிலையில், அதன் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்காவும் இந்தத் திட்டம் பேரழிவை ஏற்படுத்தும் என்று எச்சரித்துள்ளது.

காசாவில் இஸ்ரேலிய துருப்புகள் இன்னும் நுழையாத கடைசி பிரதான நகராக இருக்கும் ரபாவுக்குள் நுழைவதற்கு தயாராகும்படி இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் ரபாவில் இஸ்ரேலிய படை நடவடிக்கைக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்காது என்று அந்நாட்டு இராஜாங்க திணைக்கள பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஹமாஸுக்கு எதிராக இஸ்ரேல் நடத்தும் போர், “மிகக் கடுமையாகியுள்ளது” என்று குறிப்பிட்டுள்ளது.

ரபா நகரில் இஸ்ரேல் கடந்த வியாழக்கிழமை தாக்குதல்களை நடத்திய நிலையில் நேற்று அது தீவிரம் அடைந்திருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரபாவில் உள்ள குடியிருப்பு வீடுகள் மீது இஸ்ரேல் நேற்றுக் காலை நடத்திய தாக்குதல்களில் மூன்று சிறுவர்கள் உட்பட எட்டுப் பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

இதில் அல் செய்யித் குடும்பத்தின் ஐந்து உறுப்பினர்கள் மற்றும் அல் நஹ்ஹால் குடும்பத்தின் மூன்று உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக அந்த செய்தி கூறுகிறது.

ரபாவில் இடம்பெற்ற பிறிதொரு தாக்குதலில் மூன்று சிறுவர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செம்பிறை சங்கம் குறிப்பிட்டுள்ளது.

“எமது வீட்டுக்கு அருகில் பாரிய வெடிப்புச் சத்தம் ஒன்று கேட்டது. வீதியில் இரு சிறுவர்கள் கொல்லப்பட்டிருப்பதை நாம் கண்டோம்” என்று ரபாவில் உள்ள 60 வயதான ஜாபிர் அல் பர்தினி என்பவர் குறிப்பிட்டுள்ளார். “ரபாவில் பாதுகாப்பான இடம் எதுவும் இல்லை. அவர்கள் ரபாவுக்குள் நுழைந்தால் நாம் எமது வீடுகளிலேயே மரணிப்போம். எமக்கு வேறு வழியில்லை. நாம் வேறு எங்கு செல்லவும் விரும்பவில்லை” என்றும் அவர் குறிப்பிட்டார். ரபா தவிர தெற்கின் பிரதான நகரான கான் யூனிஸ் மற்றும் வேறு இடங்களிலும் இஸ்ரேலின் பயங்கர தாக்குதல்கள் நீடித்தன. கான் யூனிஸில் உள்ள நாசர் மருத்துவமனைக்கு வெளியில் இஸ்ரேலிய ஸ்னைப்பர் துப்பாக்கிதாரிகளால் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் மருத்துவ பணியாளர்களும் இலக்கு வைக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



கடந்த 24 மணி நேரத்தில் 13 படுகொலை சம்பங்களில் காசாவில் குறைந்தது 107 பேர் கொல்லப்பட்டு மேலும் 142 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு நேற்று கூறியது.

இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 28,000 ஐ நெருங்கி 27,947 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 67,400க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். இதில் இடிபாடுகளில் புதையுண்டு கொல்லப்பட்டதாக அஞ்சப்படும் சுமார் 7,000 பேர் காணாமல்போயுள்ளனர்.

ரபாவில் இஸ்ரேலின் தரைவழி படை நடவடிக்கைக்கான தீவிர திட்டமிடல் ஒன்றுக்கான எந்த ஆதாரத்தையும் இன்னும் காணவில்லை என்று அமெரிக்க இராஜாங்க திணைக்கள பேச்சாளர் வெடன்ட் படேல் தெரிவித்துள்ளார்.

எகிப்து எல்லையை ஒட்டிய நகராக இருக்கும் ரபா, காசாவுக்கு மனிதாபிமான உதவிகள் வருவதற்கான தீர்க்கமான வாயிலாகவும் உள்ளது. இவ்வாறான இடத்தின் மீதான தாக்குதலுக்கு நாம் ஆதரவளிக்க மாட்டோம் என்று படேல் கூறினார்.

“எந்த ஒரு திட்டமிடல் இன்றி, சிறிதும் யோசிக்காமல் இப்போதே இப்படி ஒரு போர் நடவடிக்கையை மேற்கொள்வது பேரழிவாக இருக்கும்” என்றார் படேல்.

ரபா நகரில் தற்போது காசாவின் 2.4 மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து முன்னேடுக்கப்பட்டு வருகின்றன. எகிப்தில் புதிய சுற்று பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதோடு கட்டாருடன் ஹமாஸ் பேச்சுவார்த்தையாளர்களும் பங்கேற்றுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தை கடினமானதாக இருக்கும் என்று காசாவை தளமாகக் கொண்ட ஹமாஸ் அமைப்புடன் நெருக்கமான அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருப்பதோடு ஹமாஸுக்கு போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவது முக்கியமானதாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தப் போரின் தாக்கம் பிராந்தியம் எங்கும் பரவியுள்ள நிலையில் லெபனான் போராட்டக் குழுவான ஹிஸ்புல்லா அமைப்பு நேற்று வடக்கு காசா மீது ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியது. இதற்கு பதிலடியாக தெற்கு லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

லெபனானின் நபாதியாவில் நேற்று முன்தினம் (08) இஸ்ரேல் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதல் ஒன்றில் ஹிஸ்புல்லா தளபதி ஒருவர் காயமடைந்ததை அடுத்தே இந்த பரஸ்பர தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

மறுபுறம் செங்கடலில் உள்ள கப்பல்களுக்கு எதிராக தாக்குதல் நடத்த யெமன் ஹூத்திக் கிளர்ச்சியாளர்கள் தயாராக வைத்திருந்த நான்கு ஏவுகணைகள் மற்றும் ஏழு கப்பல் எதிர்ப்பு குரூஸ் ஏவுகணைகள் மீது தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா கூறியது.